பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஜனவரி 2020



பிறரில் குறைக்காண்பதில்
நிறை ஒன்றுமில்லை

பக்கம் 3

## கவியரசியின் கலைப்பயணம்

நேர்காணல்

## வெளிவரவிருக்கும் தமிழ்நெஞ்சம் நூல்கள்










நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 | ஜனவரி 2020

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
அமின் மொஹமெட்
*இணையாசிரியர் :*
முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி
*நிர்வாக ஆசிரியர் :*
சஃபி மொஹமெட்
*ஆசிரியர் குழு :*
ஹிப்ஸுர் ரஹ்மான்
நெல்லை உலகம்மாள்
கவிஞர் தென்றல் கவி
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிஞர் பாலமுனை பாறூக்
*ஆலோசகர்கள் :*
பாட்டரசர் கி. பாரதிதாசன்
கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# பிறரில் குறைக்காண்பதில் நிறை ஒன்றுமில்லை

ஒருவன் மிகவும் அழகான ஒரு பெண்ணை மணமுடித்தான். அவள் மீது அளவு கடந்த பாசத்தையும் காட்டினான். இவ்வாறிருக்க,

ஒரு நாள் அவள் ஒரு தோல் நோய்க்கு ஆளானாள். அதனால் அவளது அழகு படிப்படியாககுறைவடையத்தொடங்கியது. அவ்வேளை அவளது கணவன் ஒரு பயணமொன்றை மேற்கொண்டிருந்தான். அதன் பின்னர், அவன் கண் பார்வையை இழந்தவனாகத் திரும்பினான்.

ஆனால் எவ்வித பிரச்சினையும் இன்றி அவர்களது மண வாழ்வு தொடர்ந்தது.

நாட்கள் செல்லச் செல்ல மனைவி தனது அழகும் படிப்படியாக குறைவடைந்து செல்வதை உணர்ந்தாள். ஆனால் தம்பதியர் இருவரின் அன்பில் எவ்வித வேறுபாடும் மாற்றமும் காட்டாது வாழ்ந்தனர்.

அவன் அவளை அதிகமாக நேசித்தான் அவளுடன் அன்பாக நடந்து கொண்டான். அவளும் அவனுடன் அவ்வாறுதான் இருந்தாள்.

அப்படியிருக்க ஒரு நாள் அவள் இறந்துவிட்டாள்.

அவளது மரணம் அவனை மிகவும் வேதனைப்படுத்தியது.

தன் அன்பு மனைவியின் இறுதி கிரிகைகளை நிறைவேற்றி அவளை அடக்கம் செய்த பின் அவன் தனி மனிதனாக அவ்விடத்தை விட்டு வீடு திரும்பினான்.

அவன் திரும்பி வரும் போது அவனுக்கு பின்னாலிருந்து ஒரு மனிதர் அவனை அழைத்து

«குருடனான நீ எவ்வாறு தனியே நடந்து செல்கிறாய்? இது வரைக்காலமும் நீ உன் மனைவியின் உதவியுடன் அல்லவா நடந்தாய்?'' எனக் கேட்டான்.

அதற்கு அவன்

''நான் குருடன் இல்லை. எனது மனைவி நோய் வாய்பட்டுள்ளாள் என்பதை நான் அறிந்ததால் அவள் மனம் காயப்படக் கூடும் என்பதால் தான் குருடன் போன்று பாசாங்கு செய்தேன்.

அவள் சிறந்ததொரு மனைவியாக இருந்தாள். அவள் பின்னடைவதற்கு ஒரு காரணமாக இருக்க பயப்பட்டேன்.

அதனால் தான் குருடன் போன்று பாசாங்கு செய்து இதற்கு முன் எவ்வளவு பாசமாக நடந்து கொண்டேனோ அவ்வாறே இது வரையும் அவளுடன் வாழ்ந்தேன்» எனப் பதிலளித்தான்.

- பிறரின் குறைகள் எங்கள் கண்களுக்குதென்படாமல்இருக்க சில வேளைகளில் நாமும் குருடன் போன்று பாசாங்கு காட்டுவது அவசியம்...

■

# காதல் சுகமானது

உனக்காக நான்
கவிதை எழுதும்
போதெல்லாம்
கவிழ்ந்து கொண்ட
பேனா முனை போலவே
நீ கவியால்
காதல் மொழி பேசுகையில்
கவிழ்ந்து பேனேன்
உன்னுள் நான்.

ஒரு கனம் தோன்றிய
உன் நிழல் படக்காட்சி
என்றும் நினைவுகளாகவே
ஓயாது வாழவே
அடம்பிடிக்கின்றது.

சேவல் கூவியது
காதில் விழவே
கண்கள் கசக்கி எழுந்த
கதிரவன் போலவே நீ
நீயாக நிற்க
உன்னை சுற்றி வரும்
பூமியாகின்றேன்.

உன் ஒளிக்கதிர்களையும்
உறிஞ்சி
ஒளித்தொகுப்புக்கு
உத்தரவாதம் தருகின்றேன்.

முகவரியற்றுப்போன
உன் முகவரியை
முழுவதுமான
பௌர்ணமியாக
வானவீதியெங்கும்
தேடுகின்றேன்.

நாளும் உனக்குள்
மேகப்போர்வை வேண்டாம்
வெளியே வா
விழித்துப்பார்!

பாசப்பாத்திரத்தில்
அன்பை
ஏந்தி நிற்கின்றேன்!

விழி தேடும்
என் வலி மட்டும் நிலைக்க
பாதைதான் தோன்றவில்லை
உன்னோடு பயணிக்க
என் இதயம் தேடும்
நிம்மதி
நீயாக இருக்கும் வரை
இந்த காதல் என்றும்
சுகமானதுதான்!

ஜெர் ஜிப்ரியா

# வசீகர நானிலு ...

## இலக்கியத்தில் நவீன வடிவம்

தமிழ் இலக்கியத்திலும், கவிதை துறையிலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவசியத்தினாலும், தேவைக் கருதியும் பல புதுமைகள் புகுந்து வந்துள்ளன. அப்போக்கு தான் அக்காலத்தில் புதுக்கவிதையாக வடிவம் பெற்றது. பின்னர் சாதாரண மக்களுக்கும் புரியக்கூடிய வகையில் கவிதை வெவ்வேறு புது வடிவங்களை ஏற்றிருக்கிறது. அவ்வாறே பாரதியாரும் துணிந்து பல புதுமைகளைக் கையாண்டு வெற்றி பெற்றார். ''சொல் புதிது, பொருள் புதிது, சுவை புதிது கொண்ட 'நவகவிதை''' என்றே பாரதியார் தமது கவிதைகளைக் குறிப்பிட்டுள்ளார். மேலும்

''பிற நாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள்
தமிழ் மொழியில்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழ் உடைய
புது நூல்கள்
தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்.''

என்று அன்றே பிறமொழி இலக்கியங்களுக்கு முதன்மை அளித்துள்ளார் மகாகவி. தமிழ் மொழியின் சிறப்பும், பிற மொழிகளில் காணப்படும் இலக்கண, இலக்கிய நயங்களைப் பாராட்டுவதும், அதனை தமிழோடு கொண்டுச் செல்வதும் தான். அவ்வாறு நயம் பாராட்டும் போதுதான், நம் தமிழ் மொழியின் சிறப்பு மற்றும் கலாச்சார பெருமைகளை பிற மொழிகளுக்கும் நாம் கொண்டு செல்ல முடியும்.

அவ்வகையில் தெலுங்கு மொழியில் "நானிலூ" எனத் தோற்றம் பெற்ற, நான்கு வரி கவிதைகள் இன்று தமிழ் மொழியில் ''தன்முனைக் கவிதைகள்'' எனப் பெயர் பெற்று, பரவலாக அனைத்து கவிஞர்களாலும் எழுதப்பட்டு வருகின்றது. இத்தெலுங்கு வடிவ கவிதையின் இலக்கணத்தைப் பற்றி வத்தலக்குண்டுலிருந்து 2017 ல் வெளிவந்த "மகாகவி" என்னும் மாத இதழில் ஹைதராபாத்தை சார்ந்த தமிழ் எழுத்தாளர் திருமிகு. சாந்தாதத் அவர்களின் கட்டுரையை படிக்க நேர்ந்தது. சாந்தா தத் அம்மையார்



தாரை இரா. மேகலா

அவர்கள் தெலுங்கு தமிழ் மொழிப் பெயர்ப்பாளராகவும், ஹைதராபாத்திலிருந்து "நிறை" என்னும் தமிழ் இலக்கிய மாத இதழை நடத்தி வரும் ஆசிரியராகவும் திகழ்ந்து வருகிறார். அவ்வம்மையாரின் கட்டுரையின் மூலம் அறிய வந்த செய்தி யாதெனின், இந்த "நானிலூ" என்னும் புதிய கவி வடிவம் தெலுங்கு பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும், சாகித்திய அகடாமி விருதாளருமான டாக்டர். கோபி அவர்களால் வடிவமைக்கப்பட்டது என்று. இவரும் தனது முதல் நானிலூ கவிதை தொகுப்பை 1998 ஆம் ஆண்டு வெளியிட்டு சிறப்பித்துள்ளார்.

நான்கு வரிகளைக் கொண்ட இக்கவி வடிவம்.."நான்.. நீ.." என்னும் பொருள்பட அமைந்து இருபது முதல் இருபத்து ஐந்து அசைகளுக்குள் அடங்குவதாகவும், முதல் இருவரிகளில்சொல்லப்படும்கருத்து,அடுத்த இரு வரிகளில் அவற்றை சார்ந்தோ அல்லது எதிர்த்தோ அமைந்து நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துவதே இதன் சிறப்பம்சமாகும். இயற்கை, சமூகம், உறவுகள், உணர்வுகள் போன்றவற்றை பாடுப்பொருளாகக் கொண்டு ஹைக்கூ கவிதைகளுக்கு உரிய அடர்த்தியோடு, ஆனால் நான்கு வரிகளில் வலம் வந்துக் கொண்டிருக்கின்றன. நம் தமிழ் மொழியில் பல்லாண்டுகளுக்கு முன்பே ஒற்றை வரியில் «ஆத்திச்சூடியும்» இரு வரியில் "திருக்குறளும்", மூன்று வரியில் "மூவடியும்" நான்கு வரியில் "நாலடியாரும்" வந்திருப்பது மிகவும் சிறப்பிற்குரிய ஒன்றாக இருந்தாலும், இந்நானிலூ கவிவடிவம் வெகுவாக அனைத்து கவிஞர்களும் எழுதுவதற்கு இலகுவாக அமைந்துள்ளது.

முகநூலில் நானிலு:

கவிச்சுடர். க. ந, கல்யாணசுந்தரம் அவர்கள், இந்நானிலூ கவிதைகளை "தன்முனைக்கவிதைகள்" எனப் பெயரிட்டு முக நூலில் குழுமம் ஒன்றைத் தொடங்கி, இன்று நூற்றுக்கும் மேற்பட்ட கவிஞர்கள் எழுதுவதற்கு வழிவகுத்து வருகிறார். முக நூலில் பயணிக்காத எனக்கு, இச்செய்தியானது, ஐயா அவர்கள் சுமார் 31 கவிஞர்களின் கவிதைகளுடன் தொகுத்து, ஓவியா பதிப்பகம் 2018 ல் வெளியிட்ட "நான் நீ இந்த உலகம்" நூல் வாயிலாகவே அறிய நேர்ந்தது.

தமிழில் முதல் நானிலு:

தனித் தொகுப்பாக 2018 ஆம் ஆண்டில் கவிஞர் இளவல் ஹரிஹரன் அவர்களால் எழுதப்பட்ட «குழந்தை வரைந்த காகிதம்» தமிழில் முதல் நானிலூ கவிதை தொகுப்பு என்னும் பெருமையைப் பெற்றது.

புதுச்சேரியின் முதல் நானிலு:

2019 ஆம் ஆண்டு கவிஞர் காரை. இரா. மேகலா அவர்களால் எழுதப்பட்ட "சுவர் ஓர செம்பருத்தி" புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் முதல் நானிலூ நூலாகவும், பெண்பாற் கவிஞர்களின் முதல் நானிலூ நூலாகவும், தமிழில் இரண்டாவது தனிநபர் நானிலூ நூலாகவும் திகழ்கிறது. இந்நூலுக்கு எழுத்தாளர் சாந்தா தத் அம்மையாரும், கவிஞர் வதிலை பிரபா அவர்களும் வாழ்த்துரை மற்றும் அணிந்துரை அளித்திருப்பது பெரும் உவகையே. பல்வேறு பாடுப்பொருட்களை கொண்ட, பல்வேறு கவிஞர்களின் ஒருசில நானிலூக்கள் இங்கே..

**கூட்டத்தில் நிழல்கள்**
**கரைந்து போகின்றன**
**உன் நிழல் தென்படாவிடில்**
**உன்னையே தேடிக் கொள்.**
(டாக்டர். கோபி)

**எனக்கு முன்னே**
**வெள்ளம் புரளும் நதியில்**
**கூழாங்கற்களோடு**
**பேசிக்கொண்டிருக்கிறேன்.**
(க. ந. கல்யாணசுந்தரம்)

**ஞானக் கடல் குளித்துக்**
**கரையேற,**
**எதிரில் வரும்**
**சேற்றில் உழன்ற பன்றி.**
(இளவல். ஹரிஹரன்)

**அண்டை வீட்டுக்காரர்**
**முறைத்தாலும்**
**உரசியே சிரிக்கிறது**
**சுவர் ஓர செம்பருத்தி**
( காரை. இரா. மேகலா )

**மனதிற்குள்**
**ஒரே சத்தம்**
**ஓரத்தில் தவமிருக்கிறது**
**தனிமை.**
( சாரதா. க. சந்தோஷ் )

**தொலைந்து போன**
**என்னைத் தேடுகையில்**
**எதிரில் நிற்கிறாய்**
**நீ.**
( மதுரா )

**இன்று நமக்கு**
**காதலை விடவும்**
**அதிகமாக வருகிறது**
**கோபம்.**
( ம. ரமேஷ் )

**பசிக்கென்று இட்ட பிச்சை**
**மதுவில் கரைகையிலே**
**எரிகிறது**
**இரு வயிறும்.**
( காரை. இரா.மேகலா )

**நாம் பிரிந்து**
**சென்ற இடத்தில்**
**ஒன்று கூடியது**
**உதிர்ந்த சருகுகள்.**
( ஹிஷாலி )

இதுபோல் இன்னும் எத்தனையோ கவிஞர்களின் கவி மனதில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கும் நானிலூா கவிதைகளுக்கு நல்ல எதிர்காலமே...





# மழைக்காலம்...

பன்னண்டாப்பு படிக்கும்போது
அரைபரிட்சை நாட்கள்
பெரும்பாலும்
மழைக்காலமாகத்தானிருக்கும்,

அப்பொழுதெல்லாம்
அடர் மழையில்
நனைவதற்காகவே
எங்களிருவரின் சைக்கிள்
நிகழ்த் தகவின்றி
நிச்சயம் கடைவிழும்,

கடைவிழுந்த சைக்கிளை
தள்ளிக்கொண்டு
கடக்கும் சாலைகள்
அவள் தலைநிமிர்ந்து
பேசும் வார்த்தைகள்
போலவே தொக்கிநிற்கும்,

அப்படியொரு நாள்
முதல் முறையாக ஓரரவமற்ற
சாலையின் இடை வெளியில்
அவளென் முகம்பார்த்து
"சளி பிடிச்சிக்கப்போகுது"
என்றதுதான் தாமதம்,

அடுத்த கணமே
அவள் மீதான அத்துனை மதிப்பையும்
கொண்டு வந்தது அம் மாமழை....

**- உமை கலையரசன்**
சேலம்.



# திருமூலர் காட்டும் வாழ்வியல் நெறி

திருமூலர் மந்திரங்கள் குலத்தை ஒன்றாய்த்
        திருமறையாய் ஓதுகின்ற வாழ்வின் சான்று
கருத்துள்ள இறைமையினை எடுத்தே காட்டும்
        காலத்தால் அழியாத நினைவின் சின்னம்.
பொருள்பொதிந்த இவரினுடைப் பாடல் யாவும்
        பொல்லாத உலகத்தில் நெறியாய் நிற்கும்
எருவாக நல்லிணக்கம் வேண்டு மென்றே
        எம்மருங்கும் வாழ்வியலைச் சான்றாய்க் காட்டும் !!

அன்பினையே ஆதியாக ஈசன் என்றே
        அகிலத்தில் வலியுறுத்தும் பாடல் தன்னை
கன்னலென சுவைபடவே ஓதி வைத்தார்
        காசினியும் மேம்படவே ஏற்போம் நாமே.
மின்னலைப்போல் ஒளிர்கின்ற பதங்கள் யாவும்
        மீமிசையில் வாழ்வியலைக் காட்டிச் செல்லும்.
சொன்னாலும் கேட்டாலும் சுவர்க்கம் உண்டாம்
        சோகத்தை மாற்றுகின்ற தெம்பும் உண்டாம் !!

மண்ணுலகில் திருமூலர் சொல்லிச் சென்ற
        மந்திரங்கள் அத்தனையும் மருந்தே ஆகும்
கண்டிடலாம் நீதிநெறி வாழ்வு தன்னில்
        கற்றபடி நடப்போமே அறத்தை நோக்கி
விண்ணுலகில் இவரைபோலே சிறப்பாய் நாளும்
        விந்தையான செந்தமிழில் வாழ்வைக் காட்டி
வண்ணமிகு நெறிமுறையை வழக்கம் என்றே
        வாய்நிறைய சொன்னவரும் எவரு முண்டோ !!!

**- சரஸ்வதி பாஸ்கரன்**





# நம்பிக்கை நாயகனின் சமுதாயப்பணி

எல்லாமே
வெறுத்துப் போய்
எதுவுமே
வேண்டாமென
உதறி நடக்கையிலும்
உடன் வந்து
ஒட்டிக் கொள்கிறது
நீ தந்த
நம்பிக்கை...

இந்த நம்பிக்கைக் கவிதையின் நாயகன் கவிஞர் ஏகலைவன். பத்து வருட காலமாக என்னுடன் நட்பாக தொடரும் நல்லுள்ளம் கொண்ட நண்பர். இவர் ஒரு மாற்றுத்திறனாளி... ஆனால், நான் இவரை அப்படி அறிமுகப்படுத்த விரும்பவில்லை... இவர் பலரின் வாழ்க்கையை மாற்றும் திறனாளி என்று காட்சிப்படுத்தவே விரும்புகிறேன்.. நான் பார்த்து பிரமித்த சிலரில் இவரும் ஒருவராவார்.

தன்பதிமூன்றாவதுவயதுபிறந்தநாளன்று, தன் நண்பர்களுடன் விளையாடிவிட்டு, இரயில் பாதையில் நண்பர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்த போது, இரயில் வருவதை நண்பர் கவனிக்காததை பார்த்து ஏகலைவன் சத்தம் போட நண்பர் விலகி ஓடித் தப்பினார்... ஆனால் இடதுபுறம் வந்த இரயிலை இவர் கவனிக்கவில்லை. நண்பர்கள் அலறியும், ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றதில் இன்ஜின் மோதி, உடல் தூக்கியெறியப்பட்டு, இவரின் கால்சட்டை கம்பியில் மாட்டி இவரை ஒரு கிலோ மீட்டர் தூரத்துக்கு இழுத்துச் சென்றுள்ளது... மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர் தன் இடதுகாலை முழங்கால் வரை இழந்துள்ளார்...

இரண்டு வருடம் பல துன்பங்களை அனுபவித்து மீண்டும் பள்ளியில் சேர்ந்து பனிரெண்டாம் வகுப்பு வரை படித்தார்.. இவரின் குடும்பம் வறுமையில் வாடிய குடும்பம் தான்... நம்பிக்கையை மட்டும் மூலதனமாக வைத்து, சென்னை தி.நகரில் ஒரு காலுடனே தையற்கலைஞராக பணிபுரிந்து வந்தார். உயர் படிப்பு படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்..

இவரின் நியாயமான ஆசையை புதுக்கோட்டையை சேர்ந்த திரு. ஷாகுல் ஹமீது என்பவர் தீர்த்து வைத்தார்.. அவரின் உதவியால் எம்.ஏ.பி.லிட் படித்து பட்டம் பெற்றார்.

சொந்த ஊரான சேலத்திற்கு குடி புகுந்து அங்கும் தையற் கலைஞராகவே வாழ்க்கையை நடத்தி வந்தார்.. பெரியார் பல்கலைக்கழகத்தில், 11 முறை

படையெடுத்த பின் இவருக்கு தற்காலிகமாக பணி கிடைத்தது.. ஆறு வருடங்கள் அங்கு பணியாற்றினார். அங்கிருந்து வந்த பிறகு அவருக்கு இலக்கியத் தொடர்புகள் கிடைக்கப் பெற்று, அவரின் கவிதை நூல்களை வெளியிட்டார்... பதினேழு நூல்களுக்கு சொந்தக்காரர்.. நூற்றுக்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளி சாதனையாளர்களை தன் நூல்கள் மூலமாக வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளார். இதுவரை யாருமே இதுபோல மாற்றுத்திறனாளி சாதனையாளர்களை இந்திய மொழியில் நூல்கள் வாயிலாக ஆவணப்படுத்தியதில்லை.

இதற்கிடையில் வாசகன் பதிப்பகம் என்ற பதிப்பகத்தைத் தொடங்கி, திரு. சுகிசிவம் ஐயா, திரு. லேனா தமிழ்வாணன் ஐயா, திரு எஸ்.பி.முத்துராமன் ஐயா போன்ற ஆளுமைகளை முன்நிறுத்தி, தன் பதிப்பகத்தின் வாயிலாய் ஒரே மேடையில் 25 நூல்களையெல்லாம் வெளியிட்டுள்ளார்...

இவரது வாசகன் பதிப்பகம் இது வரை நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றில் பல புத்தகங்கள் பரிசுகளும் பெற்றவை.

வாழ்வின்
நெடும் பயணத்தில்
பயண வழியெங்கும்
சாதனைச் சுவடுகளையும்
சந்தோஷ ரோஜாக்களையும்
பதியனிட
விடாமுயற்சி
எனும் அஸ்திரத்தை
அழகாய் எய்யப்பழகு
அதன்பின்
வானும் வசப்படும்...

இந்தக் கவிதையைப் படித்த திரு. அப்துல்கலாம் ஐயா, இவரை பாராட்டி கடிதம் எழுதியுள்ளார்... பல விருதுகளுக்கு சொந்தக்காரர்.. பிரான்ஸ் தமிழ்ச்சங்கத்தில் நடத்திய பாரதி 125 போட்டியில் வெற்றி பெற்ற விருதாளர்..

"தோன்றிற்புகழொடுதோன்றுக" என்ற வள்ளுவன் குறளுக்கேற்ப சமுதாயத்தின் நன்மைக்காக ஏதாவது செய்துவிடத் துடித்த இவரின் எண்ணத்தில் உதித்தது தான் "நம்பிக்கை வாசல் டிரஸ்ட்"

மாற்றுத்திறனாளிகளை எப்படியாவது இந்தஉலகத்திற்குநல்லதொருஉதாரணமாய் வெளிப்படுத்த எண்ணி அவர் எடுத்த முயற்சியே இது. மாற்றுதிறனாளிகளின் கல்விக்கும், சீரமைப்புக்கும்.. என்ற உயர்ந்த நோக்கத்துடன், 2013ல் இந்த டிரஸ்ட் திரு சுகிசிவம் ஐயா மற்றும் திரு லேனா தமிழ்வாணன் ஐயா இருவரையும் ஆலோசகர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டது...

தற்போது இந்த நம்பிக்கை வாசல் டிரஸ்டின் சார்பில், மாணவ சமுதாயத்தின் நலன்கருதி பின் தங்கிய அரசுப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு மாலை நேரத்தில் இலவச ட்யூஷன் நடத்தப்பட்டு வருகிறது. ஏழை மாணவர்கள் வந்து படிப்பதற்காக ஒரு வீடு வாடகைக்கு எடுத்துள்ளார்.. ஒரு ஆசிரியை தினமும் வந்து சொல்லிக் கொடுக்கிறார்..

இவ்வாண்டு தொடக்கத்திலிருந்து நடைபெற்று வரும் இந்த அறப்பணியில், தற்போது 25 மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர்.

இதை நடத்தும் ஏகலைவன் வசதி படைத்தவரில்லை.. புத்தக வெளியீட்டில் வரும் தொகையைக் கொண்டு சமாளித்து வருகிறார்.. வறுமையை போர்த்திக் கொண்டே இவர் இன்றுவரை வாழ்ந்து வருகிறார்...

சில நல்லுள்ளங்களின் துணையோடும், உதவிக்கரம் கொடுப்பவர்களின் அன் போடும் குழந்தைகளுக்கு உதவி வருகிறார்...




“பொருள் இல்லார்க்கு இவ்வுலக மில்லை” என்பதற்கேற்ப, இடத்தின் வாடகை, ஆசிரியை ஊதியம், குழந்தை களுக்குத் தேவையானவற்றை கொடுக்க இவர் நாடுவது உதவிக்கரங்களை...

தான் ஒரு மாற்றுத்திறனாளியாக இருந்தாலும், தான் வாழ்ந்ததற்கான ஏதாவது ஒரு அடையாளத்தை விட்டுச் செல்ல விரும்புகிறார் நம்பிக்கைக் கவிஞர் ஏகலைவன்..

கனவு காணுங்கள் என்ற கலாம் அவர்களின் வாசகத்திற்கேற்ப, இவரின் கனவுஎன்பதைவிடஇந்தஇலட்சியநோக்கு வெற்றிப் பாதையை நோக்கிப் பயணிக்க வேண்டி அனைவரும் வாழ்த்திடுவோம்...

“வறியார்க்கென்று ஈவதே ஈகை”

என்கிற குறளுக்கேற்ப, நாமும் நம்மாலியன்றதை இவரின் “நம்பிக்கை வாசல்” டிரஸ்ட்டிற்கு அள்ளிக் கொடுக்க இயலாவிட்டாலும், கிள்ளிக் கொடுத்து நம் மனிதத்தை வெளிப்படுத்துவோமே..

முகநூலில் Nambikkai Vaasal trust என்ற பக்கத்தில் இவரின் பணிகளைப் பார்வையிடலாம்....

மற்ற எல்லா அறப்பணிகளையும் விட கல்வி தானம் மிக உயரிய அறப்பணி. நாமும் இவரின் அறப்பணிக்கு கைகொடுக்க முன் வருவோம்...

(கவிஞர் ஏகலைவனைத் தொடர்பு கொள்ள.. 98429 74697)

நல்ல தலைமுறையை உருவாக்கும் இந்த சமூகப்பணி தொடர்ந்து நடக்க உங்கள் நன்கொடைகளால் துணை நிற்க வேண்டி...

.......................................................................

Name - NAMBIKKAI VAASAL TRUST

Ac No - 1186 1150 0001 9668
IFSC - KVBL0001186

Bank - KARUR VYSYA BANK
(Salem Main Branch, Salem - 1)

.......................................................................

கூகுள் பே மூலமாக.. 86829 94697

கட்டுரையாக்கம் :
**கவிஞர் சுமதி சங்கர்**

# புத்தாண்டு பரிசு

மலர்மதி



ஏன்தான் இந்த சேல்ஸ் பிரிவில் வேலைக்குச்சேர்ந்தோமோஎன்றாகிவிட்டது அவிநாஷுக்கு. சேல்ஸ் விஷயமாக அடிக்கடி வெளியூர் போகவேண்டியுள்ளது. திருமண மாகி இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. இந்த இரண்டு வருடங்களில் இளம் மனைவி இன்பாவுடன் அவன் கழித்த நாட்கள் மிக சொற்பமே. 'வெளியூர் செமினாரா? கூப்பிடு அவிநாஷை' என்றாகிவிட்டது அவன் அலுவலகத்தில்.

ஆரம்பத்தில் சீனியர்களுக்கு அடங்கி நடந்தது எவ்வளவுப் பெரிய சிக்கலை உண்டாக்கிவிட்டது?

மூன்று நாள் வேலையாக டெல்லிக்குப் போயிருந்தான் அவிநாஷ். முதல் நாள் 'சட்'டென அவன் நினைவுக்கு வந்தது நான்காம் நாள் அவனுடைய திருமண நாள். கடந்த வருடம்தான் மனைவியுடன் கொண்டாட முடியவில்லை. 'அப்பாடா... எப்படியோ இந்த வருடமாவது கொண்டாட வாய்ப்பு கிடைத்ததே' என எண்ணி சந்தோஷப்பட்டான்.

இன்று மாலையே ஃப்ளைட். இரவு வீடு போய் சேர்ந்துவிடலாம். மனைவிக்கு ஒரு பரிசு கொடுக்கவேண்டும் என்றெண்ணி முதல் நாளே முடிவு பண்ணி டெல்லி கடைத் தெருக்களில் அலைந்து ஒரு கடையில் கண்டுபிடித்தான் அந்தப் பரிசை.

அது ஓர் அழகான தாஜ் மஹால். கண்ணாடிப் பெட்டிக்குள் கிரிஸ்டலால் மிக நேர்த்தியாக செதுக்கி வடிவமைக்கப்பட்ட தாஜ் மஹால். காதலின் சின்னம். அதுதான் மனைவி இன்பாவுக்கு ஏற்ற சரியான அன்பளிப்பு. ஏனெனில், இன்பாவை அவன் காதலித்துத் தான் திருமணம் செய்துக்கொண்டான்.

அவன் அவசரத்தில் இருந்ததால் அப்போது வாங்கவில்லை. கடையைப் பார்த்து வைத்துக்கொண்டான். பிறகு வாங்கிக்கொள்ளலாம் என்று.

அன்று மாலை அவன் விமான நிலையத்துக்குப் புறப்படும் முன் அந்தக் கடைக்குப் போனான். அது பூட்டிக் கிடந்தது.

பக்கத்துக் கடையில் விசாரித்தான். கடைக்காரரின் உறவினர் யாரோ தவறி விட்டதால் இன்று விடுமுறையாம்.

'சே... எவ்வளவுப் பெரிய முட்டாள்தனம் செய்துவிட்டோம்? பார்த்த அன்றைக்கே வாங்கி இருந்திருக்கலாம். பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று தள்ளிப் போடுவதெல்லாம் எப்படி நழுவிப்போய்விடுகிறது?'

வேறு வழி இல்லை. ஊரில்தான் ஏதாவது வாங்கிக்கொடுக்கவேண்டும் என தீர்மானித்தவனாய் சூட்கேஸ் சகிதம் விமான நிலையத்தை அடைந்தான் அவிநாஷ்.

இரவு வீட்டை அடைந்தவனுக்கு அசதியாக இருந்தது.

நல்ல உறக்கம் போட்டு மறு நாள் காலை பத்து மணிக்குத்தான் எழுந்தான்.

"என்ன ஐயாவுக்கு இன்னும் தூக்கம்

போகலையோ?” என்று கேட்டுக்கொண்டே காபியுடன் வந்து நின்றாள் இன்பா.

“ஸாரிடா.. செம டயர்டா இருந்துச்சு.” என்றான்.

“பரவாயில்லை, போய் குளிச்சிட்டு வாங்க. இன்னைக்கு என்ன நாள் தெரியு மில்ல?”

“அதெல்லாம் ஞாபகமில்லாம இருக்குமா?”

“அதானே பார்த்தேன். எங்கே ஆபீஸ் வேலையில ஐயா மறந்திருப்பாரோன்னு நெனைச்சேன்.” என கிண்டலடித்தாள் இன்பா.

மாலையில் கேக் வெட்டி திருமண நாளைக் கொண்டாடிவிட்டு தியேட்டரில் ஒரு நல்ல சினிமா பார்த்துவிட்டு இரவு உணவை ஒரு நட்சத்திர ஓட்டலில் சாப்பிடுவது என தீர்மானித்திருந்தார்கள்.

பகல் உணவுக்குப் பிறகு, “இதோ வந்துவிட்டேன்..” என கூறி வெளியே கிளம்பிவிட்டான் அவிநாஷ்.

சென்னையில் பல இடங்களில் சுற்றியும் சரியான பொருள் ஒன்றுமே கிடைக்க வில்லை அவனுக்கு.

‘என்ன செய்வது? - புரியாமல் கைகளைப் பிசைந்தான்.

சோர்ந்துபோய் வெறுங்கையுடன் வீடு திரும்பினான்.

கடைசியில் மனைவிக்குப் பரிசு ஒன்றும் கொடுக்க முடியாமல் போய்விட்டதே என்கிற வருத்தம் அவனைப் படுத்தியது.

பரவாயில்லை. மாலையில் வெளியே கிளம்பும்போது அவளை அழைத்துக் கொண்டுபோய் அவள் விரும்பும் நகை ஏதாவது வாங்கிக்கொடுத்துவிடலாம் என சமாதா னமாகிப் போனான்.

மாலை.

அவனுக்குப் பிடித்த பைனாபிள் கேசரி செய்திருந்தாள் இன்பா.

ஆர்டர் கொடுத்த கேக் வந்து சேர்ந்தது.

ஆசையுடன் சேர்ந்து வெட்டி ஒருவருக் கொருவர் ஊட்டிக்கொண்டனர்.

காதல் திருமணம் என்பதால் உறவினர் யாரும் வராதது சற்று வருத்தத்தைத் தந்தது.

சரியான சமயத்தில் பரிசு எதுவும் தரமுடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டதை தயங்கி, தயங்கிச் சொன்னான் அவிநாஷ்.

அவன் சொன்னதைக் கேட்டு எங்கே அவள் பூ முகம் வாடிப் போய்விடுமோ என அஞ்சியவனுக்கு ஏமாற்றம்.

அவள், கல,கல’வென சிரித்தாள்.

அவன் குழம்பி நிற்க, அவள் சொன்னாள்:

“இந்த முறைதாங்க நீங்க எனக்கு விலை மதிப்பில்லாத பரிசைக் கொடுத்திருக் கீங்க...”

அவன் மேலும் குழப்பமடைய, அவள் விளக்கினாள்:

“முந்தா நாள் எனக்கு நாள் தள்ளி போயிருந்ததால் பக்கத்து வீட்டு மாமியோடு கிளினிக் போய் டெஸ்ட் பண்ணிப் பார்த்தேன். நான் ‘உண்டாகி’ இருப்பது உறுதியாகிவிட் டது. உங்களுக்கு சஸ்பென்ஸாகச் சொல்லலாம்னு இருந்தேன். இப்பச் சொல்லுங்க, நீங்க எனக்குக் கொடுத்திருப்பது விலை மதிப்பற்ற பரிசுதானே?”

மகிழ்ந்துபோன அவிநாஷ், இன்பாவை மென்மையாக அணைத்து, மிருதுவாக முத்தமிட்டான்.

**நேர்காணல் : தமிழ்நெஞ்சம் அமின்**




# கவிஞர் தென்றல் கவி

## தமிழ்ச்சிட்டு

கவியரங்கம், பலகண்டு போற்றப் படுபவர் பிரான்ஸ், தமிழர் கலைக் கலாச்சார பேரியக்கத்தால் கவியரசி யென பெருமையுடன் புகழப்பட்டு விருது வழங்கி சிறப்பிக்கப்பட்ட கவிஞர் தென்றல் கவியுடன் பொன் மாலைப் பொழுதில் உரையாடினோம். புன்னகையுடன் வரவேற்று அமர்த்தி நேநீர் உபசரித்தார். பின்னர் நேர்காணல் தொடர்ந்தது...

**உங்கள்இயற்பெயர்தென்றல்கவி அல்லவென்று நினைக்கிறேன் பெயர் காரணம்?**

தென்றல்கவி என்பது முகநூலுக்கு என்று வைத்துக்கொண்ட புனை பெயர்.. பின்னாளில் அதுவே நிலைத்து விட்டது.. எனது பெயர் தமிழ்ச்சிட்டு...

தனித்தமிழ் இயக்கம் வைத்து தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்ட பாவலர் பெருஞ்சித்திரனார் அவர்களின் இதழ்கள் தென்மொழி தமிழ்ச்சிட்டு இதில் தமிழ்ச்சிட்டு குழந்தைகளுக்கான தனித்தமிழ் மாத இதழ் எங்கள் வீட்டிற்கு தொடர்ந்து வந்துக்கொண்டிருந்தது. அதனால் இப் பெயரை எனது தாயார் எனக்கு வைத்தார்கள்.

நானும் ஆர்வமாக படித்த இதழிது எனது பெயரே இதழின் பெயராக இருப்பதுக் காண எனக்கு மிகவும் பெருமையாக இருக்கும்..

இப்போது ஆறாம் வகுப்பில் பாவலர் பெருஞ்சித்திரனார் அவர்களின் பாடல் ஒன்று பாடமாக வைக்கப்பட்டுள்ளது. அதில் ஆசிரியர் குறிப்பில் தென்மொழி தமிழ்ச்சிட்டு என்ற பெயரைப்பார்த்துவிட்டு மாணவர்கள் உங்கள் பெயர் நூலில் உள்ளது என்று பெருமைப்பட்டுக் கொள்வது மகிழ்வாய் இருக்கும்.

நான் பாரம்பரிய தமிழ்க்குடும்பத்தில் பிறந்தவள் என்பதை பெருமையாகக் கூறிக்கொள்கிறேன்..

தாத்தா. பெரும்புலவர். குறள்நெறித் தோன்றல் மீ.தங்கவேலனார் அவர்கள் தாய் கவிமுகில் தங்க அன்புவல்லி அவர்கள் தமிழ்த் தென்றல் திரு.வி.க அவர்களிடம் வாழ்த்துப்பெற்றவர். பாவலரேறு பெருஞ் சித்திரனார், ம.இலெ.தங்கப்பா முதலிய தனித்தமிழ் அடலேறுகளின் செல்வமகளாய்த் திகழ்ந்தவர். கவியோகி சுத்தானந்த பாரதியார், கவிக்கோ அப்துல் ரகுமான்,

கலைஞர் கருணாநிதி, வாலி, கவியரசர் கண்ணதாசன், சுரதா, இளந்தேவன், கவிப்பேரரசு வைரமுத்து, காமராசன், மு். மேத்தா, புலமைப்பித்தன், முத்துலிங்கம் போன்ற எண்ணற்ற பாவலர்களோடு கவியரங்கம் பல கண்டவர்.

தமிழ் நாடு முழுவதும் ஏறாத கவியரங்க மேடை இல்லை. கம்பன் பாரதிதாசன் வாழ்வைச் சொல்வதில் இவர்க்கு நிகர் எவருமிலர் பெற்ற விருதுகள் ஏராளம். பாரதியார் நூற்றாண்டு விழா, புதுச்சேரி_ கவிமுகில். உவமைக்கவிஞர் சுரதா அவர்களால் சந்த தமிழ்ப்பேரொளி. இன்னும் பல வடமொழி கலந்த பட்டங்கள் என்பதால் குறிப்பிடப்படவில்லை.

உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் கவிதைப் போட்டியில் பொற்கிழிப்பரிசு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் தொடக்கவிழாவில் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் அளித்த பரிசு..

நான்காம் உலகத்தமிழ் மாநாட்டுக் கவியரங்கில் பாராட்டும் பரிசும் பதினொன்றாம் பன்னிரண்டாம் வகுப்பு தமிழ் பொது பாடநூலாசிரியர்..

இவரின் பாடல் கம்பனுக்குத்தாலாட்டு பன்னிரெண்டாம் வகுப்பு சிறப்பு தமிழ் நூலில் பாடமாக இடம் பெற்றது.

பணி: அரசு மேனிலைப்பள்ளி தலைமையாசிரியை (ஓய்வு) இத்தகு பல பெருமைகளுக்குச் சொந்தக்காரரான இவரை எனது தாய் என்று கூறும்போது உள்ளம் உவகையடைகிறது.

அம்மாவின் பெரிய அண்ணன்.. எனது பெரிய மாமா.. இவரை நாங்கள் ஆய்வுச்சுடர் என்றே அழைப்போம். அ.த.பன்னீர்செல்வம் அவர்கள் இவரின் தமிழ்ப்பணியும் அளப்பரியது நிறைய ஆய்வுக்கட்டுரைகள்எழுதியுள்ளார்.இவரும் மேனிலைப்பள்ளி தலைமையாசிரியராக ஓய்வு..

எனது சித்தப்பா புலவர் வே.மாரியம்மன்.. அவரின்மகள்கார்த்திகாஎன்றுஅனைவருமே தமிழ் தமிழ் என்றே வளர்ந்தவர்கள்தாம்...

எனது தங்கைகள் உடன்பிறந்தவர்கள் என்று அனைவருமே தமிழின் மீது மிகுந்த பற்றுள்ளவர்கள்..

எனது பெரிய அண்ணன் பாவேந்தன் இவர் பன்முகத்திறமையாளர் என்று

கவியுலகப் பூஞ்சோலை 3ம் ஆண்டு விழாவில்... ஆனந்த் உமேஷ், இதயம் விஜய் பாலா தியாகராஜன், தமிழ்நெஞ்சம், வெற்றிவேல்பாண்டித்துரை மற்றும் தென்றல் கவி



கூறிக்கொள்வதில்பெருமிதம்கொள்கின்றேன் தமிழ் ஆங்கில இலக்கியங்கள் அத்துபடி.

### உங்களைப்பற்றி, உங்கள் குடும்பம் பற்றிக் கூறுங்கள் ?

கணவர் சுந்தர பாண்டியன் (தாய்மாமா) ஆசிரியர். இவருக்கும் இலக்கியங்களில் ஆர்வம் அதிகம். குழந்தைகள் – கபிலன் - சமையற்கலை. பரணன் இரண்டாம் வருடம் BSc Nursing. நான் நடுநிலைப்பள்ளி தமிழ்ப்பட்டதாரி தலைமையாசிரியை MA,MEd,Mphil.,ஆசிரியப்பணிபதினெட்டுவயதுமுதல் தொடக்கம் அரசு வேலை ஆசிரியப்பணியில் பெற்ற அனுபவங்கள் ஏராளம். மிகச்சிறந்த ஆசிரியர் என்று பலராலும் பாராட்டுகள் வாங்கியதை கூறிக்கொள்வதில் மிகவும் பெருமைக்கொள்கிறேன் இந்நேரத்தில்… மாணவர்கள் என் மீது வைத்த அன்பு என் மீது வைத்திருந்த பெரு மதிப்பு இவர் எங்கள் ஆசிரியர் என்ற அவர்களின் பெருமிதம் இவை என்னை மிகவும் பேரானந்தத்தில் ஆழ்த்தியது.. பல விருதுகள் பெற்ற பெருமை அடைந்தேன் எனது மாணவர்கள் என் மீது வைத்த நம்பிக்கை…

ஒரு நிகழ்வை மட்டும் கூறிக் கொள்கிறேன்….

அது ஒரு கிராமம்.. மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு.. மிகவும் பின்தங்கிய மாணவர்கள் மட்டுமே பயிலும் பள்ளி.. எந்த ஒரு ஆசிரியரும் அங்கே இருக்க விருப்பம் கொள்வதில்லை நான் சென்றேன்.. கல்வி நிலை மிகவும் பின்தங்கிய நிலை.. என்னால் எவ்வளவு அக்குழந்தைகளுக்கு கற்றுத்தர இயலுமோ கற்றுக்கொடுத்தேன்… நல்ல மாற்றம் அவர்களின் நிலையில்…

மாற்றம் வேறு ஊருக்கு மகிழுந்து வந்து நிற்கிறது பள்ளி முழுவதும் ஒரே அழுகை கூக்குரல்.. சாலையில் வந்து அமர்ந்து விட்டனர்… எனக்கோ என்ன செய்வது என்றே புரியவில்லை.. நல்ல நேரம் போய்விட்டது அடுத்த பள்ளியில் பணியேற்றேன் இரண்டு நாள் கழித்து தொலைபேசி அழைக்க… ஒரு பெற்றோர் என்னிடம் என்னம்மா செய்தீர்கள் எங்கள் குழந்தைகளை நடு இரவில் எழுந்து உட்கார்ந்து கொண்டு அழுகின்றாள் அபிநயா.. அவள் மட்டுமல்லி பல குழந்தைகள் எங்கள் தெருவில் இப்படித்தான் அந்த அப்துல்கலாம் போல செய்து விட்டு சென்று விட்டீர்கள் அம்மா என்று கூறியவுடன் நெகிழ்ந்து விட்டேன். அடடா தவறிழைத்து விட்டோமே என்று… பிறகு இரண்டு நாள் கழித்து மறுபடி தொலைபேசி அழைப்பு அப்பள்ளி ஆசிரியை.. டீச்சர் உங்கள் பிள்ளைகளுடன் பேசுங்கள்… உங்கள் புகைப்படத்தை வைத்துக்கொண்டும் மடிக்கணினியில் பார்த்துக்கொண்டும் அழுகை என்று…

அப்போது தான் உணர்ந்தேன் இந்த ஆசிரியத்தொழிலில் மட்டுமே இப்படி எல்லாம் கிடைக்கும் மறக்க இயலா

கவிஞர் சரஸ்வதி பாஸ்கரன், கவிஞர் இராம வேல்முருகன் இவர்களுடன்…





தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தென்றலின் தேடல்கள் கவிதைநூல் வெளியீட்டுவிழாவில் தமிழ்நெஞ்சத்திடமிருந்து நூலைப் பெற்றுக் கொள்பவர், கவிஞர் வெற்றிப்பேரொளி, கவிஞர் அனந்தசயனம், கவிஞர் தென்றல் கவி, மறைவில் கவிமுகில் தங்க அன்புவல்லி இவர்களுடன் ஸ்ரீ சக்தி

அற்புத அனுபவங்கள்... இது போல் பற்பல... யாரும் நமக்கு விருதுகள் கொடுக்க வேண்டா... நமது மாணவர்கள் நமக்கு கொடுப்பது தான் உண்மையான நல்லாசிரியர் விருது... பல மருத்துவர்கள் பொறியாளர்கள் என பல்வேறு துறையினரை உருவாக்கும் பெருமை இதனையே சாரும்....

அதென்னவோ தெரியலிங்க டீச்சர் நீங்கள் எடுக்கும் பாடம் மட்டும் எப்படி எளிமையாக உள்ளது நிறைய மதிப்பெண் கள் பெற முடிகிறது மணிமொழி என்ற பெண்... பொறியாளராக நல்லதொரு வேலையில் உள்ளாள் அவள்...

... இப்படியாக நேசித்த ஒரு தொழில் இவ்வாசிரியப்பணி.

**கலை இலக்கியம் இதில் உங்கள் ஈடுபாடு குறித்து...**

ஓவியம் வரைய மிகவும் பிடிக்கும். விதவிதமான கோலங்கள் போடுவதில் விருப்பம் அதிகம். பரிசுகள் பெற்றுள்ளேன். பாடல்கள் பாடுவதிலும் விருப்பம். (இடையில் பாடிக்காட்டுகிறார்கள். மகிழ்ச்சியில் திளைத்தோம்) இயற்கையை நேசிப்பதில் ஆர்வம் அதிகம்...

எனது சிறுவயதில் செடிகொடிகள் பூக்கள் பறவைகள் என்று அதன் பின்னாலே சுற்றியவள். ஊதா மற்றும் கருப்பு வண்ணப்பறவை வித்தியாசமான குரல் என்ன என்று அதன் பின்னால் சென்று பனங்காடை bluejay பிறகு இந்த செம்போத்து பற்றிய ஆராய்ச்சி.. பிற கூட்டில் இருந்து திருடி உண்ணும் முட்டை...இதை நேரில் கண்டறிந்து அம்மாவிடம் கூறியது. இப்படி காச்சூழ் தேன்சிட்டு என்று உள்ளூர்ப் பறவைகள் வெளியூர்ப் பறவைகள் பூநாரை மலைமொங்கான் கூழைக்கடா என்று ஆராய்ச்சி செய்வதில் பெருவிருப்பம்

## உங்களுக்குப்பிடித்த இலக்கிய நூல்கள் மற்றும் பிரியமான எழுத்தாளர்கள்?

எனக்கு சங்கப்பாடல்கள் மிகவும் பிடிக்கும். அதை படித்து ரசிப்பதில் ஆர்வம் அதிகம். படிக்கும் காலங்களில் வைரமுத்துவின் நூல்களை விரும்பிப் படிப்பேன். அவருடைய. நூல்கள் ஒன்று விடாமல் படித்து முடித்துவிடுவேன். அப்படியொரு தீவிர ரசிகை நான். எங்கள் வீடு நூல் நிலையம் போல நூல்களால் நிறைந்து இருக்கும். பன்னிரண்டாம் வகுப்பு முடிப்பதற்குள் அத்தனைப் புதினங்கள்படித்துவிட்டேன்பாலகுமாரன் சுஜாதா நா.பார்த்தசாரதி கல்கி...

ரஷ்யன் நாவல்கள் சிறுகதைகளும் ஒரு அலமாரி முழுவதும் நிறைந்து இருக்கும். அத்தனையையும் படித்து தீர்த்த அந்த விடுமுறைக்காலங்களை ஒருபோதும் மறக்க இயலாது.

மாக்சிம் கார்க்கியின் தாய், வெண்ணிற இரவுகள், மனிதனின் மறுபிறப்பு, குல்சாரி, மண்கட்டியை காற்று அடித்துக்கொண்டு போகாது, குழந்தைகளும் குட்டிகளும் நவரத்தினமலை மற்றும் சிறுகதைகள் சிறுவர் கதைகள் என்று படித்து மகிழ்ந்த அந்தக் காலங்களை நினைவுகூரும் போது நெகிழ்வாக உள்ளது.

## கவிதை பற்றி...

கவிதை எழுத ஆரம்பித்து நான்கு வருடங்களே ஆகிறது. எனக்கும் கவிதை வரும் என்பது எனக்கேத்தெரியாது. ஏதோ ஒரு குழுமத்தில் ஞாபகம் வருதே ஞாபகம் வருதே என்று தலைப்பு. மனதிற்குத் தோன்றியதை எழுதினேன்... முதல்பரிசு... என்ன இதுதான் கவிதையோ என்றே ஆச்சரியம் இவ்வளவு தானா... எழுதினேன் எழுதினேன்... கவியுலகப்பூஞ்சோலை இதற்கு தளம் அமைத்துக்கொடுத்தது... எழுத ஆரம்பித்த உடனே நூலில் கவிதைகள் போட வேண்டும் தாருங்கள் என்றனர். ஒரு நாள் மாலைப்பொழுது உடனடியாக பத்துக்கவிதைகள் பத்து நூலில் போட எழுதிக்கொடுக்கும் அளவிற்கு முன்னேற்றம். இப்படியே பயணம் தொடர்ந்தது..

கவிவேந்தர் பட்டம். முதலில் பூஞ்சோலை யில் கிடைக்கப்பெற்றது. என்னை கவிதாயினி என்று அறிய வைத்தது கவியுலகப்பூஞ்சோலைதான். பிறகு நிறைய பட்டங்கள்போட்டிகளில் நூற்றுக்கணக்கில் ஒரே வருடத்தில். மேடைக் கவியரங்குகள் பலவும் பங்கு பெறுகிறேன்..

மரபு தெரியவில்லை என்ற ஏக்கமும் இம்முகநூலால் தீர்த்து வைக்கப்பட்டது. கவிஞர் கண்ணதாசமுருகன் அவர்கள் எனக்கு மரபு கற்றுக்கொடுத்த

நிலாமுற்றம் நான்காம் ஆண்டுவிழாவில் மாறன், வீரபாண்டிய தென்னவன், கவிமுகில் தங்க அன்புவல்லி, கவிஞர் முத்துலிங்கம் இவர்களுடன் தென்றல் கவி



ஆசான். அவர் மூலமாக வெண்பா எழுதக்கற்றுக்கொண்டேன். மற்றும்கவிஞர் அகன் அவர்களின் போட்டிகளில் கலந்து கொண்டு பயிற்சி கிடைக்கப்பெற்றேன்..

இப்போது தஞ்சைத் தமிழ் மன்றம் கவிஞர் இராமவேல்முருகன் அவர்களின் போட்டிகளிலும் பங்கு பெறுகிறேன். இன்னும் முழுமையாக நிறைவு பெற வேண்டும்.

**முகநூல் குழுமமொன்றில் பெரும் பணியாற்றி வருகிறீகள். அதைப்பற்றி கொஞ்சம்...**

தற்போது கவியுலகப்பூஞ்சோலை முகநூல் குழுமத்தில் செயலாளராக மூன்றாண்டுகளுக்குமேலாகச்செயல்பட்டு வருகிறேன். இதன் நிறுவனர் தம்பி ஒரத்தநாடு நெப்போலியன் அவர்களுக்கு மனம்நிறை நன்றிகள் பல. என்னுடன் உடன்பிறவா தம்பிகளாய் உடனிருந்து தமிழ்ப்பணி பூஞ்சோலையில் ஆற்றிய ஆனந்த் உமேஷ், பாலா தியாகராஜன், வெற்றி வேல்பாண்டித்துரை, விஜய் என்று இவர்களை எந்நாளும் மறக்க இயலாது. அதுபோல் இன்றளவிலும் பெற்றதாய் போல எனை வளர்த்த ஸ்ரீசக்தி மா. மற்றும் என்னுடன் இன்று வரை உடனிருந்து என்னை வழிநடத்தும் நீங்கள் எனது வாழ்வில் இன்றியமையாதவர் என்பதையும் கூறிக் கொள்ள விழைகிறேன்...

எனது கவிதைகளை தென்றலின் தேடல்களாக நூலாக்கி வெளிவர துணை செய்த உங்களுக்கு நான் மிகவும் கடமைபட்டுள்ளேன்.. உங்களின் நட்பு கடவுளின் ஒரு வரப்பிரசாதம் என்றே நான் கருதுகிறேன்...

மேலும் தமிழ்நெஞ்சம் இதழுக்கு என்னை ஆசிரியராக்கி அழகுபார்க்கும் அய்யா அவர்களுக்கு மற்றும் இந்நேர்க்காணலுக்கும் என்னைத்தெரிவுசெய்தமைக்கும்நெஞ்சினிய நன்றிகள் பல...



# தென்றலின் தேடல்கள்




**இராம வேல்முருகன்**
வலங்கைமான்

தென்றல் கவியை ஆண்டு விழாக்கள் கவியரங்கங்களில் அவ்வப் போது சந்திப்ப துண்டு. அவரது இயற்பெயர் யாதென அறியேன். அவரது தாயார் ஒரு சிறந்த கவிஞர். அவரது கவியரங்கத்தலைமை கண்டு வியந்து போயிருக்கிறேன். இவரது கவிதைகளிலும் அந்த தாக்கம் ஆங்காங்கே தெரியும். இவரது கவிதை நூல் ஒன்றைப் படிக்கும் வாய்ப்பு சமீபத்தில் கிடைத்தது. அந்த கவிஞர் தென்றல் கவி (தமிழ்ச்சிட்டு) அவரது புத்தகத்தின் பெயர் தென்றலின் தேடல்கள்.

அட்டைப்படம் வெகு அருமை; நமை உள்ளே சென்று படிக்கத் தூண்டும் வண்ணம் அட்டையை வடிவமைத்துள்ள நண்பர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அட்டை மட்டுமல்ல ஒவ்வொரு பக்கமும் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளது. நமது புத்தகமும் இவ்வாறு இருக்கலாம் என்ற ஆசையையும் தூண்டுகிறது.

உள்ளே உள்ள கவிதைகளும் வடிவமைப்புக்குச் சற்றும் குறைந்தல்ல என்று மிக அருமையாக வார்க்கப் பட்டுள்ளன. அனுராதா கட்டபொம்மன் அவர்களின் அணிந்துரையோடு தொடங்குகிறது. அவரது அன்னையாரின் வாழ்த்துரையும் உண்டு.

யார் கை அழகு எனத் தொடங்கு கிறது. பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் குழந்தைகளாய் இருக்கும் போது மருதாணியின் மேல் இருக்கும் மோகமும் முதல்நாள் போட்டுவிட்டு மறுநாள் காலை யார் கை அதிகம் சிவந்திருக்கும் என ஒரு போட்டியே நடக்கும். அதனை அழகாக ஞாபகப்படுத்துகிறது இக்கவிதை.

காதலின் நோக்கம் ஒன்றுதான் என்று தவறான ஒன்றை மறைமுகமாகக் குறிப்பிடுகிறார் கவிஞர். ஆனால் எல்லோருடைய காதலின் நோக்கமும் அவ்வாறிருப்பதில்லை என்பது அவரவர் அனுபவத்தில்தான் தெரியும்.

ஞாபகம் வருதே என்ற கவிதை அனைவரிடத்திலும் அவரவர் ஞாபகத்தை வெளிக்கொணரும் என்பது உண்மை

“காதல் என்றே
அருகில் வந்தாய்

நீயே எனதுயிர்
என்றாய்

விட்டு விலகேன்
என்றாய்

ஆனால்
சென்று விட்டாய்

காத்துக் கொண்டு
கண்ணீருடன் நான்
அதே இடத்தில்”

ஆண் பெண் இருபாலருக்கும் பொருந்தும் அற்புதக் கவிதை.

நிறைய கவிதைகள் அகப்பொருள் தாங்கியேஉள்ளன.சிலகவிதைகள்சமூகத்தைச்

சாடியுள்ளன. காவிரியை அழைத்து உள்ளன. வானத்தையும் மேகத்தையும் நிலவையும் காதலையும் கடலையும் எல்லா கவிஞர்களைப் போலவே இவரும் விளித்து எழுதியுள்ளார். கவியரங்கங்களில் பாடிய கவிதைகளும் சில வெண்பாக்களும் இக் கவிதைத் தொகுப்பில் உள்ளன.

''போட்டவிதை புல்லன்று
பெருமரங்காண்
மனிதம் என்னும்
மாபெரும் ஆற்றல்
முயற்சி என்னும்
மூல மந்திரம்
இன்னல் வந்தால்
இடுப்பொடிக்காதோ
எழுவாய் சோதரா
உலகம் உன் கையில்''

என்ற கவிதை இளைஞர்களுக்கு தன்னம் பிக்கையைத் தூண்டும் வரிகள்

மழை பற்றிய கவிதை மனத்தை சில்லிடச் செய்கிறது

''அடைமழை
குளிரெடுக்கவே
உடல்நனைத்து
மேனிதொட்ட
மழையில்
சிலிர்த்தது மனம்''

என்கிறார்

யாழ்ப்பாணநூலகத்தைஎரித்ததைக் கடிந்து கொள்ளும் கவிதையில் இவரது தமிழ்ப்பற்றும் கோபமும் கொப்பளிக்கிறது

சிறகடிக்கும் ஆசையில் சின்ன சின்ன ஆசைகள் தெரிகின்றன.

படிக்கப் படிக்கத் திகட்டவில்லை கவிதைகள் மிகவும் எளிமையான கவிதை வரிகள் படிக்கும் போது இவை நமது வாழ்விலும் நடந்துள்ளதே என யோசிக்க வைக்கும் கவிதைகள்




மரபுக் கவிதைகளும் இவருக்கு எழுதத் தெரியும். அவை சார்ந்த கவிதைகளையும் தனியாக ஒரு தொகுப்பு வெளியிடவும் மேலும் பல கவிதைகளை வெளியிட்டுச் சிறப்புறவும் வாழ்த்துகிறேன்.

ஆசிரியர் :
தென்றல் கவி (தமிழ்ச்சிட்டு)
தஞ்சாவூர்
அலைபேசி : 9865840100

பதிப்பாசிரியர் :
தமிழ்நெஞ்சம் அமின், பிரான்சு
editor@tamilnenjam.com

பக்கம் 148 ,
விலை ரூ 150 /

# ஏன் கூறாமல் சென்றாய்?



பண்ணியம் செல்வக்குமாரி



எனக்குப் பயணங்களில் நம்பிக்கையில்லை
எந்தப் பயணமாகட்டும்
சுறுசுறுப்பாக கிளம்புவதாக நீ நடிப்பாய்

ஆனாலும் போகவும் தோணாது உனக்கு
என்னைப் பிரிந்து போவதை
சிறப்பாக நினைத்ததில்லை நீ

எல்லாம் நீயாக
எனதாக இருப்பாய் என்பதால்
போகவேண்டியே ஆகவேண்டுமென்ற
கட்டாயமாக உன் மனசு எனக்குச் சொல்லும்
நான்தான் எல்லாம்
செய்து அனுப்பிவைப்பேன்..

உனக்கென ஏதும்
எடுத்துக்கொள்ளக்கூடத் தெரியாது.
பயணத்தின் தீவிரத்தை உன்
வாய்சொல்லும் போதெலாம்
மனம் நடுங்குவதை அறிந்திருக்கிறேன்...

எனக்குப் பயணங்களில் நம்பிக்கையில்லை

நீ அடுத்தடுத்து வரும் பயணங்களைப் பற்றி
சதா தொணதொணப்பாய்..
எரிச்சலுறுவதற்கு முன்னரே குளிர்விப்பாய்..

அது எப்போதும் என்
முன்அனுமதிக்காக என்பதும்
முன் தெரிவித்தல் என்பதும்
எனக்குப் புரியாமலில்லை
எனை விட்டுச் செல்வது உனக்கு
ஏற்புடையதில்லை என்பதையே
இவையெலாம் உணர்த்தும்

இப்போது நீ சென்ற பயணம் பற்றி
என்னோட பேசவுமில்லை
என் முன்அனுமதி பெறவுமில்லை
எனக்கு ஏற்புடையதுமில்லை
என்னோடு அடுத்தடுத்து அதைப்பற்றிக்
கதைக்கவுமில்லை...
பின் இதை மட்டும் எப்படி
சொல்லாமல் பயணித்தாய்...

என்னிடம்கூட சொல்லாமல்
எனைவிட்டுப் பயணிக்க
எப்படி துணிச்சல் வந்தது உனக்கு..

இந்த ஒரு பயணத்தை மட்டும்
என்னை மீறிச் சென்றாய்

உன் இறுதிப் பயணமென்பதை
ஏன் கூறாமல் சென்றாய்?

# வரலாறு

## கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
## மாடுஅல்ல மற்றை யவை (குறள் 400)

கல்வி என்பது எண்ணும் எழுத்தும் மட்டும் அன்று. அது பொருள் ஈட்டித் தருகின்ற ஒரு முதலீடு மட்டும் அன்று. அது அவற்றிற்கும் மேம்பட்ட பயன்பாட்டினை நல்குவதாக உள்ளது. என்பதை உணர்த்தும் குறளாக இது உள்ளது.

எமது முக நூல் வரலாற்றுப் பகுதியில் திராவிட இனத்தினுடைய கலாச்சாரத்தின் தொன்மம் குறித்து ஆராய்ந்து வருகிறோம். காலத்தால் திராவிடப் பண்பாடு எவ்வாறு மாற்றம் பெற்றது என்பதையும் ஆய்ந்து வருகிறோம். அந்த வகையில் திராவிடத் திருநாட்டில் கடவுளை அறியாத சங்கத் தமிழனும் அவனது இலக்கியங்களும் மூவாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் தற்காலத்து தமிழனின் கையில் ஆவணமாகக் காணக் கிடைக்கிறது. அவையே சிந்துவெளி கோட்டோவியமும் கீழடி செம்பானை ஓட்டுக் கீறல் எழுத்துமாகும்.

அது போல் வாழ்வியல் என்பது களவும் காதலும் வீரமும் மானமும் கொண்டதாக இருந்த சங்க காலத்து நெறிமுறை சமணம் ஏற்றிருந்த கி பி காலமாக மாற்றம் பெற்றதை அறிகிறோம். மேலும் பார்ப்பனரின் கலாச்சார படையெடுப்பில் தமிழினத்தின் நடுகல் வழிபாடு மெல்ல சிறு தெய்வ வழிபாடகியதை அறிகிறோம். சிறு தெய்வம் பெருந்தெய்வமாக வடிவெடுப்பதற்கு முன்பாக கி மு முதல் நூற்றாண்டு வரையில் தமிழினம் கடவுளை காப்பவன் என்று நம்பி பார்ப்பனரின் கால்களில் விழவில்லை. இருந்தும் மெல்ல சிவன் என்றும் விட்டுணு என்றும் கதைகள் புனைந்து மண்ணில் தூவப்பட்டன. இதற்குக் கை கொடுத்த முதல் காதை சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரம் என்பது ஒரு முலையிழந்த திருமா பத்தினிக்காக எழுதப்பட்டது அன்று. இது போன்ற கதைகள் கி மு காலத்தில் கிரேக்கத்திலும் இருந்துள்ளது. புத்தரது காலத்திலும் வட இந்தியாவில் இப்படிப்பட்ட கதைகள் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தும் திராவிட இனத்தார் இந்திரனையோ ஆகாய வீதியில் பறந்துவரும் புட்பகவிமானத்தையோ ஏற்கவில்லை. அவனது பகுத்தறிவு அப்படி. அப்போதுதான் சமயங்கள் முதன் முதலாக தென்னிந்தியாவில் நுழைந்து பரப்புரை செய்தது. தத்தமது தெய்வ வழிபாட்டு முறைகளை மாலை நேரத்து நிலவின் ஒளியில் மேடையமைத்து விளக்கியது. காப்பியங்களும் கதைகளும் எழுந்தன.

ஐம்பெருங் காப்பியங்கள் தத்தம் இறை வழிப்பாட்டை மண்ணில் விதைக்கவே எழுதப்பட்டன. அவை முழுதாக இன்று நமக்குக் கிடைக்கவில்லை. இருந்தும் தமிழ் மண்ணில் சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே முதலில் காப்பாற்றப்பட்டிருக்கிறது. அடுத்த தாக சீவகசிந்தாமணியும் தப்பித் தவறிதான் உ வே சா அவர்களின் கையில் கிடைத்தது. அது போல் குண்டலகேசியும் அதே உ வே சா அவர்களின் கைக்குக் கிடைத்தும் அது பதிப்பிக்கப்படவில்லை. அது அவரது கையில் இருந்து மறைந்துவிட்டதாகக் கதைகட்டப்பட்டது. பார்ப்பனரின் கொள்கை அப்படி. காண்க அவரது சுயசரிதை. எனவே மன்னர்களும் அன்று சைவத்தையும் வைண வத்தையும் வளர்த்தெடுக்க முயற்சித்தனர் என்பதில் ஐயமில்லை.

அவர்களில் இன்றைய கேரள நாட்டின் ஆதி சேர குடிகள் பார்ப்பனரின் கலாச்சாரத்தைத் தத்தெடுத்துக் கொண்டன. இதனை இளங்கோவடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் செவ்வனேச் செய்து முடித்தனர். அவர்கள் முதலில் பார்ப்பனர்களால் பரப்புரைச் செய்யப்பட்ட சிவ வைணவக் கதைகளை தொகுத்து வைக்கின்ற வேலையை தமது இரட்டைக் காப்பியத்தின் வழியாகச் செவ்வனே செய்து முடித்தனர்.

இன்று மக்களாட்சி நடைபெறுகிறது. அதில் மக்கள் திருடர்களாக இருக்கும் பொழுது மன்னனும் திருடனாகிறான். ஆனால் அன்று மன்னன் திருடனாக இருந்தால்தான் மக்களும் திருடர்களாக இருந்துள்ளனர். மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள் என்ற ஒரு நிலைப்பாட்டில் சமுதாயம் கட்டுண்டது. அரசனின் ஆணையை மீறி ஒரு கருத்தாக்கத்தை முன்னிறுத்துவது அரச தண்டனைக்கு வித்திடும். எனவே மக்கள் ஒரு குறுகிய வட்டத்திற்குள் தமது சிந்தனையைச் சுறுக்கி வாழ்ந்தனர். சங்க காலமோ மக்களின் சிந்தனையே மன்னவனின் ஆணையாக இருந்திருக்கிறது.

இருந்தும் கி பி ஆறாம் நூற்றாண்டின் திருநாவுக்கரசர் (அப்பர்) மற்றும் திருஞானசம்பந்தர் ஆகியோரின் தலைமை யில் நடைபெற்ற பக்தி இயக்கத்தின் போது மக்களும் மன்னனும் மதி மயங்கினர். காரணம் பார்ப்பனர் சமணர்களையும் புத்த மதத்தவர்களையும் களையெடுத்திட கடவுள் கொள்கையைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டனர். இதனை தமிழகத்தின் இலக்கிய வரலாறு காட்டுகிறது. கோயிலில் வடித்த சிற்பங்கள் சமணர்களின் கழுவேற்றம் கண்டு கண்ணீர் வடிக்கிறது.

எனவே சிலப்பதிகாரம் எழுதப்பட்ட தாகச் சொல்லப்படுகின்ற கி பி இரண்டாம் நூற்றாண்டின் திராவிடர்களின் மண்ணில் கடவுள் கொள்கையைப் பார்ப்பனர் தூவத் துவங்கினர் என்பதை எளிதாக உணர முடிகிறது. இதனை இளங்கோவடிகள் எவ்வாறு செய்து முடித்தார் என்பதை இனி வரும் ஆய்வில் காண்போம்.

இன்று புத்தகத்தைப் படைப்போர் தமது கருதுகோள்களை முன்னுரையாகத் தொகுத்தளிப்பதைக் காண்கிறோம். இது போல் அன்று இளங்கோவடிகள் முகவுரை எழுதுகிறார். அதற்குப் பெயர் பதிகம் என்றாகிறது. தொல்காப்பியம் இதனை முன்னம் என்றும் சுட்டுகிறது. அதனை, “இவ்விடத்து இம்மொழி இவர்இவர்க்கு உரிய என்று , அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்” என்று நூற்பா 1463 நுவல்கிறது.

இங்கு நோக்க வேண்டியது என்ன வென்றால் கி மு காலத்தில் இயற்றப்பட்ட கவிதை நூல்களில் கடவுள் வாழ்த்து என்பது இருப்பதில்லை. காரணம் அப்போது மக்கள் கடவுளை முன்னிறுத்திய சிந்தனையைக் கொண்டிருக்கவில்லை. எல்லாம் அவன் செயல் என்பதை ஏற்கவில்லை. எனவேதான் சங்க இலக்கியமும் தமிழ்க் காப்பியமும் கடவுள் வாழ்த்துப் பாடல்களைக் கொண்டிருக்கவில்லை. இருந்தும் கி பி எட்டாம் நூற்றாண்டில் சங்கராச்சாரியாரின் சமயப் புரட்சியில் பாரதம் பாடிய பெருந்தேவனார் முதன் முதலாக சங்க இலக்கியம் அனைத்திற்கும் கடவுள் வாழ்த்தினை எழுதி இணைத்தார். இருந்தும் சிலப்பதிகாரத்திற்கு அப்படி ஒரு கடவுள் வாழ்த்தினை எழுதி இணைக்க இயலவில்லை. எனவே அன்றைய தொல்காப்பிய நெறிமுறைக்குட்பட்டு அடிகள் பாடிய பதிகம் மாற்றம் பெறவில்லை. அடிகள் இயற்கையைப் போற்றிப்பாடி தமது காப்பியத்தைத் துவக்கினார். மங்கல வாழ்த்துடன் துவக்கினார். திங்களையும் ஞாயிற்றையும் போற்றுதும் என்றே தமது எழுத்தாணியைத் தீட்டினார்.

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை (குறள் 400).

**பாவலர் சீனி பழனி எம் ஏ**



# வெற்றி

**Dr.ஃபஜிலா ஆசாத், d.lit**

சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

நாம் எல்லோருமே மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறோம். மகிழ்ச்சி யாக இருங்கள் என்று மற்றவர்களை மனதார வாழ்த்துகிறோம். ஆனால் என்னதான் மகிழ்ச்சி மகிழ்ச்சி என்று பேசினாலும், ஒரு இனிய நாள் மகிழ்ச்சியாக சென்று கொண்டிருக்கும் போதே மனதில் ஏதோ பதைபதைப்பு வரும். நீங்கள் விரும்பியபடியே நடந்து, உருகிய ஐஸ்கட்டியாக உச்சி முதல் பாதம் வரை உள்ளுக்குள் உற்சாக சிலீர் பரவசமாக பரவிக் கொண்டிருக்கும் போதே அடி வயிற்றில் ஒரு பயப்பந்து சுழன்று தவிக்க செய்யும்.

இந்த மகிழ்ச்சி நீடிக்குமா... இந்த சூழல் மாறாமல் இருக்குமா.. ஏதாவது அல்லது யாராவது இந்த இனிய சூழலை மாற்றி விடுவார்களோ.. இந்த மகிழ்ச்சியை ஏதாவது கவலை வந்து சூறையாடி விடுமோ... இந்த வெற்றியை, இந்தப் புகழை, நான் பழகிக் கொள்ளத் தொடங்கும் போது, அது என்னிடமிருந்து விலகிக் கொள்ளுமோ... இந்த உயரம் நிலைக்குமா.. விழுந்தால் அடி பலமாக இருக்குமோ... இப்படி என்னென்னவோ எண்ணங்கள் மனதில் சுழன்று பலரையும் மகிழ்ச்சி இல்லாமல் தவிக்க செய்யும்.

தான் எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்க வேண்டும், தான் வெற்றி பெற்றவனாக இந்த உலகம் தன்னை உற்றுப் பார்க்க வேண்டும் என விரும்பும் ஒருவன் வெற்றி பெற்ற உடனேயோ அல்லது வெற்றிக்கு அருகே வரும் போதோ தன்னையுமறியாமல், தான் கவனிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறோம், தன்னுடைய திறமை வெளிச்சத்திற்கு வரக் கூடிய அதே நேரம் தன்னுடைய குறைகள் படம் பிடிக்கப் பட்டுவிடுமோ என பல நேரம் பதைபதைக்கத் தொடங்கி விடுகிறான். அன்ன நடைக்கு ஆசைப் பட்டு சொந்த நடையை மறந்து விடுவோமோ, வெற்றி சுகத்திற்காக தன் சுயத்தையே இழக்க வேண்டி இருக்குமோ என அவன் ஆழ்மனதிற்குள் பலவிதமான எண்ணங்கள் தோன்றத் தொடங்குகிறது.

தவிர, ஒரு முறை வெற்றி பெற்றுவிட்டால் இந்த உலகம் இதையே என்னிடம் எதிர் பார்க்குமே, தொடர்ந்த வெற்றியை என்னால் கொடுக்க முடியுமா.. என்னிடம் அதற்கான திறமை இருக்கிறதா அல்லது என்னுடய பலவீனம் வெளிப்பட்டு விடுமோ என தனக்குள்ளேயே பல கேள்விகள் எழ, தான் தானாக இயல்பாக இருந்ததில் தான் வெற்றி பெற்றோம் என்பதை மறந்து விட்டு, தான் பிறருடைய எதிர்பார்ப்புக்கு இப்போது இருக்க வேண்டுமே என எண்ணத் தொடங்குகிறான். அவனுடைய இயல்பை மாற்றத் தொடங்கி அப்படி பிறருடைய எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியாத சூழலில், தன்னை தற்காத்துக் கொள்வதற்காக தன்னை தனிமைப் படுத்திக் கொள்கிறான். சமூகத்தின் பார்வையில்,

தன்னுடைய இமேஜை பாதுகாக்க வேண்டுமே என அவனுக்குள் ஒரு தகிப்பு தொடங்கி விடுகிறது.

இந்த நினைப்பே திறமையான பலரையும் ஒரு அளவிற்கு மேல் சாதிக்க விடாமல் தடுக்கிறது. இப்போது இருப்பது தான் நிம்மதியாக இருக்கிறது. இதை விட்டு விட்டு பறக்க முயற்சித்தால், இப்போது திடமாக நான் ஊன்றி நிற்கும் என் கால்களை இழக்க நேரிடுமோ என மனக் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. அதுவே அவர்களை அறியாமல், பல செயல்களை முடிக்காமல், நாளை, மறுநாள் என்று அதை தள்ளிப் போடச் செய்து வெற்றியை தள்ளிப் போடுகிறது.

ஏதாவது ஒரு வகையில் உங்கள் வெற்றி உங்களுக்குள் மன அழுத்தத்தைத் தந்தால், அல்லது வெற்றியை நோக்கி போய்க் கொண்டிருக்கும் போது உங்களுக்குள் இனம் புரியாத தடுமாற்றம் வந்தால் அமைதியாக உட்கார்ந்து உங்களுக்குள் உற்றுப்பாருங்கள். எந்த பயம் உங்களுக்குள் சீர் செய்யப் படாமல் கிடக்கிறதென்று ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள்.

பொதுவாக, உங்கள் திறமையால் நீங்கள் தனித்து விடப் பட்டு விடுவீர்களோ, பலருடைய பொறாமைக்கும் தீய பார்வைக்கும் ஆளாகி விட நேரிடுமோ, வேலைப்பளு கூடி விடுமோ, பின் தங்கிப் போகிறவர்களின் வேண்டாத பகையை இழுத்து வந்து விடுமோ... என ஏதாவது ஒரு பயம் உங்கள் வெற்றிக்கு வேட்டு வைக்கும். பொதுவான ஆழ்மன சிந்தனை இப்படி இருப்பதால் இது வெளிப்படையாகத் தெரிவதில்லை.

நீங்கள் எப்போதும் போல் இருப் பதாகவே நினைத்துக் கொண்டிருக்கும் அதே நேரம் இத்தகைய எண்ணங்கள் ஆழ்மனதில் தோன்றி உங்களை அறியாமலேயே உங்கள் வேகத்தையும் விவேகத்தையும் தடை செய்து விடுகின்றன.

ஒரு கிராமத்தில் மேற்படிப்புக்கு அயல் நாட்டுக்கு செல்ல வேண்டும் என்ற கனவுகளோடு படித்த அந்த இளம் பெண்ணிற்கு அதற்கான சந்தர்ப்பம் வாய்க்கிறது. ஆனால் அந்த நேரத்தில் அவளுடைய தாய் நோய்வாய்ப்பட்டு விட இவள் அவரை விட்டு விட்டு போகத் தயங்குகிறாள். அப்போது நிலமையை அறிந்த அவள் தாய் தன் மகளிடம் ‘நீ கவலைப் படாமல் செல், நீ அங்கு சிறந்த பெயரும் பட்டமும் வாங்கும் வரை எனக்கு ஒன்றும் ஆகாது’ என ஆறுதலாக சொல்லி அனுப்பி வைக்கிறார். வெளி நாடு சென்று நல்ல முறையில் படித்துக் கொண்டிருக்கும் அவளுக்கு இறுதி வருடப் பரீட்சை நெருங்கும் போது உடல் நலம் சரியில்லாமல் போய் அந்தத் தேர்வை எழுத முடியாமல் போய் விடுகிறது. தேர்வுகள் முடிந்தபின் உடல் நலம் தேறிய அவள் மறு தேர்வுக்கு விண்ணப்பிக்கிறாள். மறு தேர்வின் தேதி கிடைக்கும் வரை ஆரோக்கியமாக இருப்பவளுக்கு தேர்வுத்தேதி நெருங்கும் போது மீண்டும் உடல் நலமில்லாமல் போய்விடுகிறது. இதுவே மீண்டும் மீண்டும் தொடர்கதையாக, அவளது மருத்துவர்

◆

விழுந்து விழுந்து சிரிப்பதில்
தவறில்லை...

ஆனால்...

விழுந்தவர்களை பார்த்து
சிரிப்பதுதான் தவறு..!!

◆

ஒரு துளி பேனா மை பத்து
இலட்சம் பேரைச் சிந்திக்க
வைக்க போதுமானது ..

◆

செய்யும் உதவியை சொல்லி
காட்டாதீர்கள்!

சொல்லிக்காட்டும் வழக்கம்
இருந்தால், உதவியே
செய்யாதீர்கள்!

**- ருத்ரதேவி**

மனநல ஆலோசனைக்குப் பரிந்துரைக்கிறார்.

அவளுடைய ஆழ்மனது அவளையு மறியாமல், அவள் தாய், ‘நீ பட்டம் வாங்கும் வரை எனக்கு ஒன்றும் ஆகாது’ என்று சொன்னதை ‘தான் பட்டம் வாங்கி விட்டால் தனது தாய் இறந்து விடுவார்’ என்று அர்த்தம் பண்ணிக் கொண்டு இறுதித் தேர்வை எழுத விடாமல் தடுத்துக் கொண்டிருப்பது மனநல ஆலோசனையின் போது தெரிய வருகிறது.

தன்னுடைய வெற்றியை அவளுக்கு ஒரு பயமாக அவள் மனம் முன்னிறுத்துகிறது என்பதை அவளுக்கு உணர வைத்து அவள் பட்டம் பெற்று வருவதைப் பார்ப்பதற்காக அவளது தாய் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார், அவளுடைய படிப்பு இந்த சமுகத்திற்கு உதவ வேண்டும், தானும் அதில் பங்கெடுக்க வேண்டும் என மிகுந்த விருப்பத்தோடு அவர் அவள் வெற்றியை எதிர் நோக்கி நல்ல ஆரோக்யத்தோடு இருக்கிறார் என அந்தத் தாயின் அடுத்த இலக்கை அவரே சொன்னவுடன் தான் அவளால் அதில் இருந்து மீண்டு வெற்றி பெற முடிகிறது.

ஆழ்மனம் மிக ஆற்றல் வாய்ந்தது. அதன் நன்மையும் தீமையும் அதை நீங்கள் எப்படிக் கையாள்கிறீர்கள் என்பதிலேயே இருக்கிறது. சில நேரம் இப்படி, உங்களையு மறியாமல் ஏதாவது ஒன்றைத் தன்னுள் ஒரு வரையறையாக பிடித்து வைத்துக் கொள்ளும். அது வெற்றியை நெருங்கும் நேரத்தில் மீண்டும் தொடங்கிய இடத்தில் வந்து விட்டு விடும். உங்களுக்கே அது பல நேரம் புரியாமல் இருக்கும்.

உண்மையில் வெற்றி என்பது ஒரு முடிவு அல்ல. அது ஒரு அழகிய அனுபவம். அது இனிய பயணம். எல்லாவற்றிலுமே நன்மையும் தீமையும் இருக்கிறது. ஆனால் தேங்கிப் போவதை விட்டும் முன்னேறிக் கொண்டிருப்பது நன்மையே தரும் என்பதை ஆழமாக நம்புங்கள். அது உங்கள் anxiety யைக் குறைக்கும். நிரந்தர வெற்றி உங்கள் வசப்படும்..

# மனிதம் போற்று



## கவிஞர் தியாரூ

அன்பை போற்று
அதையே சாற்று
நட்பை போற்று - இது
கவிஞன் கூற்று!

கருணை போற்று
கவலை மாற்று
காலம் போற்று - இது
கவிஞன் கூற்று!

இன்பம் போற்று
இன்னல் நேற்று
காலம் போற்று - இது
கவிஞன் கூற்று!

நினைவை போற்று
நெஞ்சை ஆற்று
இளமை போற்று - இது
கவிஞன் கூற்று!

மானம் போற்று
மடமை தூற்று
கானம் போற்று - இது
கவிஞன் கூற்று!

வீரம் போற்று
வாழ்வை ஏற்று
உறவை போற்று - இது
கவிஞன் கூற்று!

அறிவை போற்று
அன்பை ஊற்று
அழகை போற்று - இது
கவிஞன் கூற்று!

மனிதம் போற்று
மனதை தேற்று
கலைகள் போற்று - இது
கவிஞன் கூற்று!



# இருதயத்தை பரிசளித்த தந்தை

- பர்ஹத் ஹனி
காத்தான்குடி-இலங்கை

ஒரு அழகிய கிராமம்! அதில் சுந்தர் என்ற ஒரு ஏழை விவசாயி. கல்வி அறிவு இல்லாவிட்டாலும்.. பகுத்தறிவும், பொது அறிவும் அதிகமாய் இருந்தன. ஒரு வித்தியாசமான கொள்கை உடையவன், பணத்தாசை இல்லாதவன் சுந்தர். அடுத்தவர்களுக்கு அநீதி நினைக்கமாட்டான். தனது கிராமத்தில் இருந்து மூன்று கிராமம் தாண்டி இருந்த கிராமத்தில் வாழ்ந்து வந்த தனது மாமாவின் மகள் வித்யாவை மனமுவந்து மணந்து கொண்டான் .

நாட்கள் வாரமாகவும், வாரங்கள் வருடங்களாகவும் கடந்து சென்றாலும் அன்பிற்கும், மகிழ்ச்சிக்கும் குறைவு இல்லை. வித்யா சுந்தரின் அன்பிற்கு ஆதாரமாய் சுந்தரின் வாரிசை வயிற்றில் சுமந்தாள். இருவருக்கும் இடையில் இன்னு மோர் உறவு வரப்போகிறது என எண்ணி நாள் முழுக்க மகிழ்ந்தனர். மாதங்கள் கடந்து போக பிரசவ நேரமும் நெருங்க, நெருங்க ஒரு வகையான சந்தோசம் கலந்த பயமும் பதற்றமும் சுந்தரின் மனதை வருடிக்கொண்டன.

வித்யா நேரம் செல்ல செல்ல வலியில் துடித்தாள். உடனடியாக பக்கத்து நகரில் உள்ள அரச மருத்துவ மனைக்கு கொண்டு சென்று பிரசவ விடுதியில் அனுமதித்துவிட்டு வீடு திரும்புகிறான்..

கிராமத்தில் இருந்த பல கடவுள்களிடம் பல்வேறு ஒப்பந்தங்களை செய்து கொண்டு பலத்த எதிர்பார்ப்புடனும், பதை பதைப்போடும் மனைவி வித்யாவையும், குழந்தையையும் பார்க்கும் ஆவலில் மருத்துவமனை வராண்டாவில் தவித்தபடி காத்துக் கிடந்தான் சுந்தர்.

ஆனால் ஓர் அதிர்ச்சிதான் காத்திருந்தது அவனுக்கு. முத்தை பிரசவித்த சிப்பி உயிரிழந்து உறைந்து போய் கிடந்தது. செய்வதறியாது பாதி உயிர் இழந்த வனாய் பித்து பிடித்தது போன்று பின்னோக்கி நடக்கிறான் சுந்தர். திடீரன குழந்தை அழுகின்ற சத்தம் செவியில் ஊடறுத்து இதயத்தை உசுப்பி விடுகிறது. உணர்விழந்தவன் உயிர்த்தெழுகிறான்.. குழந்தையை பிரசவித்த பின் உயிரிழந்து விட்ட வித்தியாவைப் பார்த்து கதறினான்.. கண்ணீர் விட்டான்.

யாரோ பின்னால் முதுகை தட்டுவது போல் இருந்தது சட்டென திரும்புகிறான்; வைத்தியர் ஆர்ப்பாட்டமில்லாமல் அனுதாப பார்வையோடு பேச ஆரம்பித்தார்! «சுந்தர் உன் கையில் இருக்கும் குழந்தைதான் உன் மனைவி. இறுதி நேரத்தில் இரு

உயிரில் ஒன்றைத் தான் காப்பாற்ற முடியும் என்ற நிலைமை ஏற்பட்ட போது உன் மனைவியிடம் கேட்கப்பட்டது! அவள் கூறிய பதில் எங்களை அழவைத்தது. நான் இறந்தாலும் பரவாயில்லை என் கணவன் தலை நிமிர்ந்து வாழ மார்தட்டிச் சொல்ல.. ஒரு வாரிசு வேண்டும்! என் குழந்தையை உயிருடன் பிறக்கச் செய்யுங்கள்..!! நான் மரணித்தாலும் என் குழந்தையாய் வாழ்வேன்!» என்றாள் உன் மனைவி' என்று வைத்தியர் கூறியதை கேட்டவுடன் ஒப்பாரி விட்டு அழுதான் சுந்தர்.

இழப்பது ஒன்றும் அவனுக்கு புதிதல்ல; சிறு வயதில் வாகன விபத்தில் தந்தையை பழி கொடுத்தான், அதில் இருந்து மீள்வதற்கு முன் வயலில் மின் தாக்கி அம்மா இறந்தார், சிறு வயதில் இருந்து தனிமையை உறவாக்கி வாழ்ந்தவன். ஆனால் வித்யாவின் இழப்பு அவனால் தாங்க முடியவில்லை! சில நாட்களின் பின்னர் தனது மகள் சுகன்யாவை அழைத்துக் கொண்டு இடம் பெயர்ந்து நகர வாழ்வுக்கு புறப்படுகிறான் சுந்தர்.

அழகிய கிராமம் முழுவதுமாய் நிறைந்து கிடந்த தனது மனைவி வித்யா நினைவில் இருந்து தன் மகள் சுகன்யாவுக்காக மீள வேண்டும் என்பதால் தன் மகளை அழைத்துக் கொண்டு நகர வாழ்வுக்காக பயணிக்கிறான் சுந்தர்.

புதிய இடம். புது முகங்கள் என்று இருந்தாலும் கிடைத்த சில நல்ல அறிமுகங்களின் உதவியுடன் வாழ பழகிக் கொண்டான். முற்றிலும் விவசாயத்தில் மாத்திரம் பழக்கப் பட்டிருந்த சுந்தர் இடத்துக்குஏற்பமாற்றிக்கொள்ளவேண்டும் என கிடைத்த வேலைகளையெல்லாம் செய்து வாழ்க்கையை கடத்தினான்.

சில மாதங்களின் பின்னர் அந்த நகரத்தில் இருந்த பிரபலமான தேயிலை நிறுவனத்தில் களஞ்சிய உதவியாளராக சுந்தர் பணியாற்றத் தொடங்கினான். ஓரிரு வருடங்களில் சுந்தரின் நம்பிக்கை, பழக்க வழக்கங்கள், நேர்மை என்பவற்றை கண்ட நிறுவனத்தின்



# அம்மாவோடு...

ஒட்டிய வயிற்றில்
ஒரு மொடக்கு தண்ணி ஊத்தி
ஒட்டுத் திண்ணையில
ஓரமாக என் அம்மா..!

என்ன பாவம் செய்தா
என்ன பெத்தெடுத்தா
எனக்காக காலம்பூரா
எல்லாமே அவதானே..!

வருஷம் ஓடிபோச்சு
வயசும் ஏறிபோச்சு
வக்கணையா சோறுபோட
வாய்கலியே ஆத்தாலுக்கு..!

காலம் செய்த மாயமோ
கடவுளின் சோதனையோ
காலு ரெண்டும் விளங்காம
கண்ணீரோடு வாழுறேன்..!

அப்பன தவறவிட்டு
அனாதையா நானிருக்க
அம்மாவ காப்பாத்த
அல்லும் பகலும் தவிக்கின்றேனே..!

விடியல தேடுகிறேன்
விடியுமா என் பொழுது
விடியாமலே போய் விடுமோ
விடியாத பய என் வாழ்வு..!

**சீனுசெந்தில்**
காட்டுமன்னார்கோயில்.

உரிமையாளர் தனது அலுவலகத்தில் சுந்தருக்கு வேலை வழங்கினார். சுந்தரின் திறமையால் சகல பணிகளையும் சிறப்பாக செய்து முதலாளிக்கு விசுவாசமாக இருந்தான்.

சில வருடங்களில் முதலாளிக்கு அடுத்ததாக பொறுப்பை செய்யக் கூடியவனாக சுந்தர் மாறினார். சம்பளத்தை தவிர வேறு எதனையும் எதிர்பார்க்காமல் விசுவாசமாக இருந்த காரணத்தினால் முதலாளியின் சொத்துக்களில் ஒரு பகுதியை சுந்தருக்கு எழுதி வைத்திருந்தார்.

திடீரென ஒரு நாள் முதலாளிக்கு மாரடைப்பு ஏற்பட்டு மரணித்துவிட அவர் சொந்தங்கள் சொத்துக்களை சொந்தமாக்கிக் கொண்டதால் நிறுவனம் மூடப்பட்டது. தனது முதலாளி தனக்களித்த சொத்துக்களை வைத்து முதலாளியின் பெயரில் ஒரு நிறுவனத்தை சுந்தர் ஆரம்பித்தார்.

சில வருடங்களில் சுந்தரின் முயற்சியாலும், திறமையாலும் அந்த நிறுவனம் பெரிய அளவில் வளர்ந்தது! மகள் சுகன்யாவும் வளர்ந்து விட்டாள். மகள்தான் உலகம், அதுதான் வாழ்க்கை என்று வாழ்ந்த சுந்தர் தற்போது அந் நகரத்தில் விரல் நீட்டிச் சொல்லக்கூடிய பெரிய செல்வந்தனாகவும், முதலாளியாகவும் வளர்ந்ததால் முழு நேரமும் தொழில் பற்றியே சிந்திக்க ஆரம்பித்தார்.

தனது மகளைக் காண்பது கூட குறைவாகவே இருந்தது. தனது தந்தையின் வளர்ச்சியில்திருப்திஇருந்தாலும்பாசத்தில் இடைவெளி ஏற்பட சுகன்யாவின் மனதில் சில காயங்கள் ஏற்பட துவங்கியது...!

பிறக்கும் போதே தாயின் பாசத்தை கண்டிராத சுகன்யாவுக்கு தாயும், தந்தையும் தன்னுடைய அப்பா சுந்தர்தான். இவ்வாறு இருக்க காலத்தின் மாற்றத்தில் அப்பாவுக்கும் மகளுக்கும் இடைவெளி பெருகிக் கொண்டிருந்தது ஆனால் சுந்தருக்கு முழுக் கவனமும் நிறுவனம், வியாபாரத்தில் இருப்பதால் மகள் விடயத்தை யோசிக்க நேரமில்லை, ஆனால் சுகன்யா தினமும் இதனை நினைத்து தனிமையில் அழுது கொண்டிருப்பாள்..

பல தடவை அப்பாவிடம் பேசுவதற்கு முயன்றாலும் அது எந்த பயனும் தரவில்லை சுகன்யாவுக்கு வயது பதினாறு பருவம் அடைந்து விட்டாள். ஆனாலும் குணத்தில் அவள் இன்னும் குழந்தைதான். ஆனால் அதனை அந்த தந்தை உணரவில்லை..

சுகன்யா எப்படியாவது அப்பாவிடம் பேசியாக வேண்டும் என்ற முடிவோடு அப்பாவின் அறைக்குச் சென்றால் அப்பா நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார். அப்பா.. அப்பா.. என சுகன்யா அழைக்க தனது மனைவி வித்தியா அழைப்பது போன்று கேட்க திடீரென பதறியடித்துக் கொண்டு எழுந்து பார்த்தான், தன் மகள் சுகன்யா கால் அருகில் உட்கார்ந்து இருந்தால்..

மகளைக் கண்டதும் ''என்னம்மா இந்நேரத்தில்?'' என்று கேட்டதும் சுகன்யா «அப்பா உங்க மடியில் கொஞ்சம் படுத்துக்கவா» என்று கேட்டாள். அவள் அவ்வாறு கேட்டது சுந்தருக்கு மனதில் இரும்பு ஆயுதத்தால் குத்தியது போன்று இருந்தது. தனது அப்பாவின் மடியில் தலையை வைத்துக் கொண்ட சுகன்யா பேச துவங்கினாள். ''அப்பா நான் அம்மாவ பார்த்தது கிடையாது, ஒரு நாள் கூட அம்மா இல்லை என்று அழுதது கூட கிடையாது! ஏன்னா.. நீங்க என்னை அவ்வளவு அன்பாக பார்த்தீங்க.. ஆனால் இப்ப வெல்லாம் நீங்க ரொம்ப பிஸி! நான் அடிக்கடி அம்மா இல்லை என்கிறத நினைத்து கவலைப்படுகிறேன். நாளை எனக்கு பிறந்த நாள் அப்பா..!'' என்று கூறிவிட்டு சுகன்யா தனது அறைக்கு சென்றுவிட்டாள்.

அவளது வார்த்தையில் சுந்தர் ஆடிப் போயிட்டார். தனது பழைய காலத்தை

மீட்டிப்பார்கிறான் வித்தியாசத்தை உணர்கிறான். இரவு முழுக்க பகலாகிறது விடிந்ததும் மகளிடம் நாலு வார்த்தை அன்பாய் பேசுவோம் மன்னிப்பு கேட்டு விட்டு சுகன்யாவை வெளியில் கூட்டிச் சென்று பிறந்தநாள் பரிசு வாங்கி கொடுக்க வேண்டும் என்ற ஆவலில் சுகன்யா அறைக்கு செல்கிறார். அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருக்கிறது வாழ்கையில் மீண்டுமொரு இடி...

தனது பாசத்திற்குறிய மகள் இரத்த வாந்தி எடுத்த நிலையில் உணர்வற்றுக் கிடந்ததை கண்ட சுந்தர் தன்னை சுதாகரித்துக்கொண்டு உடனடியாக பக்கத்தில் உள்ள மருத்துவ மனைக்கு கொண்டு சென்றான்.

உடனடியாகசுகன்யாவைபரிசோதனை செய்த வைத்தியர்கள் சுந்தரை அழைத்து சுகன்யா இருதய நோயினால் தீவிரமாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இன்னும் சில மணிநேரத்திற்குள் இருதய மாற்று சத்திர சிகிச்சை மேற்கொண்டால் மாத்திரமே சுகன்யாவின் உயிரை காப்பாற்ற முடியும் என கூறினார்கள்..

வேகமாக செயற்பட்ட வைத்தியர்களினால் சத்திர சிகிச்சை மேற்கொள்ளபட்டு சில மணித்தியாலங்களுக்குப் பின் கண் திறந்தாள் சுகன்யா. தன்னைச் சுற்றி தோழிகள், அப்பாவின் நண்பர் அப்துல்லாஹ் மாமா, வீட்டு பணியாளர்கள் நிற்பதைக் கண்டவள் அப்பாவின் நண்பரிடம் "அப்பா எங்க அங்கிள்?" எனக்கேட்டாள். அதற்கு அப்துல்லா «அப்பா வெளியில் மருந்து வாங்கச் சென்றிருப்பதாகக் கூறி சுகன்யாவை சமாதானப்படுத்தினார்.

சுந்தரின் நண்பர் அப்துல்லாஹ் சுந்தரோடும் மிக நெருக்கமானவர்! சுந்தரின் முன்னேற்றத்தில் மிக உதவியாக இருந்தவர். திருமணமாகி பல வருடங்கள் குழந்தை இல்லாததால் சுகன்யாவை தனது மகள் போன்றே பார்ப்பவர், சுந்தர் தனது நண்பர் அப்துல்லாஹ்விடம் ஆலோசனை கேட்காமல் எதுவும் செய்யமாட்டார்.

# மரிக்கா ஏவாள்...

விதிக்குள்ளிருந்து பிறந்தோமோ
கர்பத்திலிருந்து பிறந்தோமோ
பிறவிச் சதிக்குள் விழுந்தோமோ
வேதிப்பொருளாய் திரிந்தோமோ

மனிதம்...

தின்று வாழும் மனிதப் பிறவிகளே..!

பெண்மை ...

தின்றே வாழும் பாதரசத் தின்னிகளே!

காதலை சரிவரச் சொல்லிக் கொடுக்காத
ஆதாம் ஏவாளின்
அரைகுறை ஆடை மட்டும்
பதிந்தது தெளிவாய் மனதில்....
ஆப்பிள் தின்ற ஏவாளின்
கயமைக்குப் பிறந்த
கயவர்களே...!
பரம்பரை தண்டனையை ஒரு முகமாய்ப்
பகிரும் ஆண்டவனே..!
திருடிய ஆப்பிளுக்கான தண்டனையை
பல்லாயிரம் ஆண்டுகள் அனுபவித்து
விட்டோம்
பரிசீலிக்க நேரில் தான் வா...
யாருக்கு தண்டனை என்றே...

கற்பிக்கப்பட்ட ஒரு தலைபட்ச
கற்பும் , மானமும் , ஒழுக்கமும்....
பறிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறோம்
எதிர் இனத்தால்...!

இனி எந்தக் கண்ணனும்
வரப்போவதில்லை...!!!

மீட்கா ஆடையில்லாப் பாடையில்
ஏவாளின் தண்டனைக் காலம்
நிறைவேறிக் கொண்டே இருக்கட்டும்
எரிக்கப்பட்டு உயிர்க்கும்...
மரிக்கா ஏவாள்...!!



**விஜி வெங்கட்**
ஹைதராபாத்.

முதல் தடவையாக அப்துல்லாஹ்வுக்கும் தெரியாமல் ஒரு பயணம் போய்விட்டார்.

சுகன்யா கண்விழித்து ஒருநாள் கடந்தும் அப்பாவை காணவில்லை என்றதும் சுகன்யாவுக்கு சந்தேகம் ஏற்படுகிறது.. தந்தையின் நண்பர் அப்துல்லாஹ்வை எதிர்பார்த்து காத்திருக்கிறாள். அப்துல் லாஹ்வும் சுகன்யாவை பார்த்து வீட்டுக்கு அழைத்துச் செல்ல வருகிறார். வந்தவரிடம் மீண்டும் கேட்கிறாள் அப்பா எங்கே? என்று வீட்டில் இருக்கிறார்.. சென்று பார்கலாம் என்கிறார்.. இன்னும் சந்தேகம் அதிகரிக்கிறது, சுகன்யாவுக்கு வீட்டுக்கு



பாட்டி நம் கையில் கொடுத்த
நெல்லிக்கனியைப் போல
ஆரம்பத்தில் கசக்கத்தான்
செய்யும் பிறகு இனிக்கும்
**மரபுக் கவிதை.**

அம்மா நமக்கு கொடுத்த
தாய்ப்பால் போல
என்றும் அரவணைக்கத்தான்
செய்யும் அன்பாகவே
**புதுக்கவிதை.**

நாம் பெற்றெடுத்த
குழந்தை நம் கையில்
தவழும்போது எல்லையற்ற
இன்பத்தைக் கொடுப்பதுதான்
**ஹைக்கூ_கவிதை.**

**ச.ப. சண்முகம்**
எழுவாம்பாடி

புறப்படுகிறார்கள்..

வீட்டுக்குச் சென்றதும் அப்பா எங்கே என்கிறாள்! ''சுகன்யா உன் அறையில் போய்ப் பாரும்மா" என்கிறார் அப்துல்லாஹ்.. ஓடிப் போய் பார்க்கிறாள். ஓர் அதிர்ச்சி அவள் இருதயத்தை வேகமாக தட்டுகிறது. அப்பாவின் புகைப்படம் பூ மாலைக்குள் ஒளிந்து கொள்கிறது! கண் கலங்கி கண்ணீர் சொட்டுகிறது.!! அருகில் இருந்த மேசையில் ஒரு பரிசுப் பொதி இருக்கிறது அதனைத் திறந்து பார்க்கிறாள். ஒருகடிதமும்சிலஆவணங்களும்இருக்கிறது. அவைகளை கையில் எடுத்துக்கொண்டு அப்துல்லாஹ்வை நோக்கி ஓடி வருகிறாள். "என்ன அங்கில் இது" என்று வினவ, இவ்வளவு நேரமும் கட்டுப் பாட்டில் வைத்திருந்த கண்ணீர் அப்துல்லாஹ்வின் கண்களில் கட்டுப்பாட்டை மீறி காவேரியாய் சீறிப்பாய்கிறது கண்ணீரோடு கதையை சொல்கிறார்.

உனது இருதயம் பாதிக்கப்பட்டு விட்டதாகவும் சில மணி நேரத்திற்குள் இருதயமாற்று சிகிச்சை செய்தால் மாத்திரமே உன் உயிரை காப்பாற்ற முடியும் என்று வைத்தியர்கள் சொன்னது. உன் அப்பா அவன் இருதயத்தை உனக்கு பொருத்துமாறு கேட்டு இருக்கிறான்.. வைத்தியர் எவ்வளவு சொல்லியும் என் இருதயம் என் மகள் உயிர் வாழும் வரை அவளோடு வாழ வேண்டும். அதுவே நான் அவளுக்கு வாழ்நாள் முழுவதும் கொடுக்கும் பரிசு.. இனி என் சாம்ராஜியத்தின் சொந்தக்காரி அவள்தான்!! என்று கூறி இருதயத்தை உனக்கு தந்துவிட்டு உயிரை கடவுளுக்கு கொடுத்து விட்டான் என்றார்.

உன் அப்பா மரணிக்கவில்லை.. உன்னோடு வாழ்கிறான்.. என ஆறுதல் கூறி தந்தையாய் அரவணைத்தார் அப்துல்லாஹ்..

ஒரு தாய் குழந்தையை வயிற்றில் சுமக்கிறாள்..! தந்தை இருதயத்தில் சுமக்கிறான்..!! தந்தையும் தாய்தான்..!!!

# உழவுக்கவிஞர் உமையவன்
# சிறுவர் நூல்கள் வெளியீட்டு விழா




வடசென்னை தமிழ்ச் சங்கத்தின் சார்பாக உழவுக்கவிஞர் உமையவனின் சிறுவர்நூல்கள்வெளியீட்டுவிழா 15.12.2019 அன்று புதுகை தென்றல் இதழ் ஆசிரியர் திரு. தருமராஜன் திருமதி பானுமதி தருமராஜன் அவர்களின் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. உமையவனின் மந்திரமலை சிறுவர் கதை நூலினை கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் அவர்கள் வெளியிட முதல் படியினை குழந்தைக்கவிஞர் கன்னிக்கோயில்ராஜா பெற்றுக்கொண்டார்.

உமையவனின் சிறுவர் கதைகளை திருமதி. துளசிபட் அவர்கள் ஆங்கிலத்தில் 'The Flying Elephant' எனும் நூலாக மொழிப்பெயர்த்துள்ளார். இந்நூலினை தமிழ்ச்செம்மல் USSR நடராஜன் அவர்கள் வெளியிட முதல் படியினை எழுத்தாளர் திருமதி. காந்தலக்ஷ்மி சந்திரமௌலி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இவ்விழாவில் பேசிய ஈரோடு தமிழன்பன் அவர்கள் 'பூக்கள் ஒரு நாட்டில் மலர்வதைப் போன்று நூல்கள் அன்றன்றும் மலரவேண்டும். ஒரு நாளில் எவ்வளவு குழந்தைகள் பிறக்கின்றார்களோ அவ்வளவு நூல்கள் பிறக்கவேண்டும் என்றார். மேலும் கூறுகையில் நூல்களை அதிகமாக எழுதும் உமையவனுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது தமிழ் இலக்கிய உலகில் வேகமாக வளர்ந்து வரும் இளைஞர் உமையவன் என்றும் பாராட்டினார்.





இந்நிகழ்வில் வடசென்னை தமிழ்ச் சங்கத்தின் தலைவர் எ.த.இளங்கோ, குழந்தைக் கவிஞர், பி.வெங்கட்ராமன், கவிஞர் மன்னை பாசந்தி, எழுத்தாளர் வான்மதி, கவிஞர் வசீகரன், கவிஞர் செம்போடை குணசேகரன் தகவல் முத்துக்கள் இதழ் ஆசிரியர் நீரை அத்திப்பூ, சாகித்திய அகாதமியின் தென்னிந்திய முன்னாள் பொறுப்பாளர் இளங்கோவன், உள்ளிட்ட பல இலக்கிய படைப்பாளிகள் கலந்து கொண்டனர்.



# ஆனந்தம்

விலைமதிப்பற்ற பொருளை தொலைத்துவிட்டு
நீண்ட நாளைக்குப்பிறகு அதைக் கண்டபோது
வருகின்ற மகிழ்ச்சி உன்னைக் கண்டபோது வந்தது

சீதையை கண்ட ஹனுமனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி
உன்னிடம் பேசும்போது வந்தது

இராமனின் மோதிரத்தைக் கண்ட
சீதையின் சந்தோஷம் எனக்குள் ஏற்பட்டது

இராமனின் திருவடிக்காக காத்திருந்த
அகழிகையைப்போல்
உன் வருகைக்காக காத்திருந்தது என் காதல்

நான் வைத்த செடியில் முதல்முறையாக
பூத்த ரோசாவை பார்த்து எப்படி மகிழ்ந்தேனோ
அதே உணர்வு வந்தது நீ முத்தமிட்டப்போது

உன்னைப் பார்த்தப்போது வந்த
ஆயிரம் ஆனந்தங்களை கவிதையாக எழுதிடவா

எனக்குள் பின்னிக் கிடக்கும் உன் நினைவுகளை
பாடலாகப் பாடவா

மீனுக்கு காத்திருக்கும் நாரையைப்போல்
உன் அன்புக்கு காத்திருக்கும் அன்னப்பறவை

பாலை நெய்யாக வெண்ணையாக
எப்படி வேண்டுமனாலும் பிரித்துவிடலாம்

ஆனால் பெண்மைக்குள் ரத்த நாளங்களிலும்
உறைந்து கிடக்கும் உன். ஞாபகங்களை
பிரிப்பது கடினமே

உன்னைக்கண்டதும் எனக்குள் உறங்கிதவித்த
அத்தனை மலர்களும் ஆனந்தம் கொண்டதடா நேசனே



- கவிஞர் **பட்டுக்கோட்டை காதர்**

# எலும்புத்துண்டுகள்

**ம. சக்திவேலாயுதம்**
நெல்லை

அழகிய வானம் பொன்மாலைப் பொழுதிலிருந்து தன்னை கருமையாக்கி கொண்டிருந்த வேளையது. அக்னீஸ்வரர் கோவிலின் பக்திப்பாடல், மரியா தேவாலயத்தின் மணியோசை, ஜும்மா பள்ளிவாசலின் மொழிகள், தேநீர் கடையில் ''எங்கேயும் எப்போதும்'' பாடல் என காதுகளுக்குள் பல குரல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன.

இதையெல்லாம் தாண்டி என் மூக்கை துளைத்தது அந்த அரேபியன் உணவகத்தின் மசாலா வாசனை.

காதா? மூக்கா? என வரும் போது மூக்கை துளைத்த அந்தக்கடையை நோக்கி ஓடத்தொடங்கினேன். கடைக்கு முன்னர் சென்ற என் கண்களுக்கு விருந்தாய் மசாலா தடவிய கோழிகள் மின்சுடுசுழற்சியில் வெந்திடும் வண்ணம் அடுப்பில் சுழன்று கொண்டிருந்தன. இப்போது எனது மனம் கண்களுக்கு தன்னை மனம் பெயர்த்துக் கொண்டது.

உணவக ஊழியர் ஒருவர் கோழிகள் வெந்து தயார்நிலையில் உள்ளனவா என சரிபார்த்துக்கொண்டிருந்தார்.

உணவக அறையிலிருந்து «ரஹீம்.. ஹாப் கிரில்...பார்சல்» என்ற சப்தம்.

''ஓகே மாஸ்டர்'' என்றார் ரஹீம்.

இந்த வேளையில் எனைப்பார்த்த ரஹீம்.

''ச்சூ.. ச்சூ.. ஓடு.. ஓடு'' என்றவாறே ரஹீம் தண்ணீர் எடுக்க முயல கிட்ட நின்ற நான் சற்று எட்டச்சென்றேன்.



ஆனாலும் அந்த கிரில் சிக்கனின் ஆசை யானதுஎன்னைஅங்கேயேகட்டிப்போட்டது. என் நாவிலிருந்து நீர் கொட்டத்துவங்கியதும். ஆனால் இப்போது எனைப்பார்த்த ரஹீம்..

''பாவம்... தள்ளி தானே நிக்க நின்னுட்டுப்போ'' என்றார்.

மேலும் ''உம்பொழப்பு மாதிரி தான் என்பொழப்பும்.. உன்னால அங்கிருந்து மட்டும் பார்க்க முடியது போல என்னால இத பக்கத்துல பார்க்க முடியதுன்னு ரஹீம்'' சொன்னதும் என் நாவிலிருந்து சொட்டிய நீர் கண்களிலிருந்து கொட்டத்துவங்கியது.

''நீ வாழ்வதற்காக என் முன்னாடி, நான் வாழ்வதற்காக இந்த கிரில் முன்னாடி'' என ரஹீம் என்னிடம் கூறிக்கொண்டிருந்தார்.

''ரஹீம்.. இன்னொரு புல் கிரில் பார்சல்'' என்றதும் தன் வேலையில் மும்மரமானார்.

இருப்பினும் என் கண்கள், மனம் இப்போது அந்த மின்சுடுசுழற்சியின்

கோழிகளின் மீதில்லை. ரஹீம்மை நோக்கியே இருந்தது. ஆனால் ரஹீமின் முழு ஈடுபாடும் தன் பணியில் மேல் இருந்தது. சுழன்ற மசாலா கோழிகளை வெட்டுவதும் அதை அளவிற்கு பிரித்து வைத்து பார்சல் செய்வதையும் நோக்கி அவரது பணி இருந்தது.

யாரோ தன்னை கவனிப்பதை உணர்ந்த ரஹீம் திரும்பிப்பார்த்தால் நான்..

‘‘ஏய்..நீ இன்னும் போகலையா’’ ரஹீம் கேட்க, என்வாலை ஆட்டினேன்.

பார்ச்சலுக்காக வெட்டும் போது கீழ் விழுந்த சிதறிய சின்னச்சின்ன துண்டுகளை ஒன்றிணைத்து கடைக்கு வெளியே சற்று தள்ளி வந்து வைத்தார்.

நான் உடனே மீண்டும் வாலாட்டியபடி அவரிடம் மேலேற முயல ‘‘வேணாம் வேணாம் இத மொதல்ல சாப்பிடுன்னு’’ சொல்லிவிட்டு கிளம்பினார் ரஹீம்.

விறுவிறின்னு கறித்துண்டுகளையும் எலும்புத்துண்டுகளையும் விரைவாய் லபக்கென விழுங்கினேன். அன்று முதல் அந்தக்கடையின் கிரில் அடுப்பிற்கு முன் நான் வந்து நிற்பதும் ரஹீம் எனக்காக இதே போல செய்வதுமான நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டிருந்தன.

ஒரு நாள் அதேப்போல ஒரு பொன் மாலைப்பொழுது வந்தது. நான் அந்த அரேபியன் உணவகத்திற்கு முன்னே என் வாலை ஆட்டியபடி.. ஆனால் அங்கே ரஹீமில்லை இன்னொருவர். மனம் இன்று கிரிலை பார்த்தும் ஆசைப்படவில்லை. ரஹீமை காணவில்லையே என்ற பட படப்பில் அந்தக்கடை வாசலின் முன்பு அங்குமிங்கும் ஓடினேன்.

கடை முதலாளி என்னைப்பார்த்து ‘‘ஒரு நாய் அங்கிட்டும் இங்கிட்டும் ஓடிட்டிருக்கு அத முதல்ல விரட்டுப்பா’’ என்று சொன்னார்.

உள்ளே இருந்து வெளிவந்த ரஹீம் ‘‘நான் விரட்டுறேன் ப்பா’’ என்றார். ரஹீமின் குரல் எனக்கு புலப்பட்டது.

‘‘என்னஉள்ளவேலைக்குமாத்தீட்டாங்க, இனி என்ன முன்னாடி தேடாத, கொஞ்சம் நில்லு’’ என்றபடி உணவகத்தில் சாப்பிட்ட வர்கள் மிச்சமீதிகளை சேகரித்து வைத் திருந்த உணவுகளை காசாளருக்கு தெரியாமல் மறைத்து எடுத்துச் சென்று உணவகத்திலிருந்து சற்று தள்ளிச்சென்று அந்த மிச்சமீதியை பரிமாறினார். நானும் அதை வேகமாக உண்ணத்தொடங்கினேன்.

‘‘நாளைக்கு கொஞ்சம் லேட்டா வா... இப்படி சீக்கிரம் வராத’’ என்று ரஹீம் சொன்னதும் என் வாலட்டலும் கொஞ்சலையும் காண்பித்தேன்.

ரஹீம் தன் வேலைக்கு மீண்டும் விரைந்தான். இப்படியே கிட்டத்தட்ட ஒரு மாதம் ஓடின. நானும் மாலை வருவேன். கத்துவேன். வழக்கம்போல் கிரில் அடுப்பின் முன் நிற்பேன். ரஹீமது மிச்சமீதிகளை உண்பேன் கிளம்புவேன்.



ஒரு நாள் காசாளர் நான் கொண்டு போகும் மீச்சமீதியை பார்த்துவிட்டு முதலாளியிடம், நல்ல உணவுகளை கொண்டு செல்வதாக காதில் சொல்ல,

''வரட்டும் அவனை வச்சுக்கிடுவோம்'' என முதலாளி சொன்னார்.

ரஹீம் அன்றும் எனக்கு மிச்சமீதி உணவை வைத்துவிட்டு உணவகத்தின் உள்ளே செல்ல.. நானும் அவன் பின்னாடி வாலாட்டிக்கொண்டே உணவகத்தை தாண்டிக்கொண்டிருந்தேன்.

உணவகத்தின் வாசலில் ''ரஹீம் இங்க வா'' என முதலாளி அழைக்க ''என்ன முதலாளி இந்தா வாரேன்'' என ரஹீம் வர..

''எங்க போயிட்டு வார'' என முதலாளி கேட்க, அது.. அது.. என ரஹீம் இழுத்தான்.

''சொல்லு இங்கிருந்து என்ன எடுத்துட்டு போன, எங்க போயிட்டு வார'' என்ற முதலாளியின் கேள்வி இடியாய் இருக்க..

உணவகத்தை தாண்டிக்கொண்டிருந்த என் கால்கள் இப்போது ஸ்தம்பித்தன. என் காதுகளுக்குள் பேரிடியாய் அந்த முதலாளியின் குரல் ஒலித்தது. ரஹீமிற்கோ குற்றவாளியை நிறுத்தி கேள்வி கேட்பது போல அந்த கேள்விகள் தோன்றிற்று.

''சொல்லு.. ஏன் இப்படி நிக்குற'' என முதலாளி கேட்க,

நடந்த நிகழ்வுகளையும் தினமும் எனக்கு செய்யும் பரிவுணர்வுகளையும் மிச்சமீதி உணவுகளையும் ரஹீம் சொன்னார். இப்போது ஸ்தம்பித்திருந்த என் கால்கள் ஓடத்தொடங்கின. ஆனால் முதலாளி நம்பும் நிலையில் இல்லை.

''ரஹீம் நல்ல புது உணவுகளைத்தான் அந்த நாய்க்கு மறைச்சு மறைச்சு போட்டிருக்க'' என முதலாளி கூற

''இல்ல முதலாளி..இல்ல முதலாளி'' என ரஹீம் மறுக்க

முதலாளி காசாளரை கூப்பிட்டு இன்றோடு இவன் கணக்கை முடி என கிளம்பினார்.

''ஒரு நாய்க்கு மிச்சமீதி போட்டது குத்தம்மா ஐயா'' என ரஹீம் கேட்க

''பொய் சொல்லாத அதை ஏன் எங்ககிட்ட கேட்காம மறைச்சு மறைச்சு எடுத்துட்டு போகணும்'' என காசாளர் பதில் கேள்வி கேட்டார்.

நேர்மையையும் உண்மையயும் யாரிடமும் நிரூபிக்க முடியாமல் போன வருத்தத்துடன் தன் கணக்கை வாங்கிக்கொண்டு கிளம்பி னான் ரஹீம்.

மறுநாள் ஆனது. அதே மாலை நேரம் நான் எல்லா பாடல்களையும் தாண்டி வழக்கம்போல் அந்த உணவகத்தின் வாசலில் நின்றேன்.

''ஏய் உன்னோட ஆளு இங்கில்ல.. ச்சீ போ ச்சீ போ'' என காசாளர் விரட்ட.... நான் எட்டி நிற்பதற்குள் என் மீது வெந்நீர் ஊற்றப்பட கத்திக்கதறி ஓடினேன். ரஹீமின் பரிவும் பாசமும் என் கண்முன்னே திரைப்படமாய்.. மனதுக்குள்ளும்..வெளியேயும்.. பாவம் ரஹீம் என்னால் தான் அவன் வேலை போயிற்று என உணரத்தொடங்கினேன்.

உணவகத்திலிருந்து சற்று தூரத்தில் இன்னொரு உணவகம் ரொம்பச் சின்ன உணவகம் அதில் ரஹீம் நின்று கொண்டிருந்தான். அதைப்பார்த்த எனக்கு மகிழ்ச்சி. ரஹீமிற்கும் என்னை பார்த்த மகிழ்ச்சி.

இந்த உணவக உரிமையாளர் ''யார் நாய்ப்பா'' எனக்கேட்க... ''என் நாய் தான் சார்'' என ரஹீம் சொல்ல... அந்தக்கடை முன்னேஅங்குமிங்கும்துள்ளிக்குதித்தோடி

மனமெங்கும் மகிழ்ச்சியை வெளிக்காட்டும் விதமாக வாலை ஆட்டிக்கொண்டே நின்றேன்.

உடனே முதலாளி எனக்கு ஒரு உதவி செய்யணும். இங்கு தினமும் மிச்சமீதி உணவை எனக்கு தந்தால் நான் இதற்கு உணவாக்கிடுவேன் என்றார் ரஹீம்.

“சரி எடுத்துக்கோ” என முதலாளி சொல்ல, என் பரிவை புரிந்து கொண்டமைக்கு நன்றி.. நன்றி என வாலாட்டாமல் மகிழ்ச்சியோடு நன்றி சொன்னார் ரஹீம்.

இப்படியே நாட்கள் ஓடின... ஒரு நாள் தான் வேலை பார்க்கும் இடத்தில் ரஹீம் ஒருமணி நேரம் பெர்மிசன் கேட்டுக்கொண்டு வெளியே வந்தான். அந்ததருணத்தில் வந்த எனையும் அழைத்து சென்ற அவன் பழைய உணவகத்தின் கிரில் அடுப்பு முன் நின்றான்.

அன்று நான் நின்றதைப்போலவே இன்று அவனும் நானும். காசாளர் எங்களைப்பார்க்கும் பார்வை ஒருவித ஏளனமாகவே இருந்தது.

“என்ன வேணும் அவர் கேட்பதற்கு முன்னாடியே ஹாப் கிரில் சிக்கன் பார்சல் கொடுங்க” என ரஹீம் கேட்க... வாங்கிய கையோடு ரஹீம் வீட்டிற்கு சென்று கிரில் சிக்கனை வெளுத்துக்கட்டி எங்கள் கனவை நிறைவேற்றிக் கொண்டோம். அவன் வேலைக்கு மீண்டும் கிளம்ப, இப்போது ரஹீம் வேலை செய்யும் நேரத்தில் நான் அவன் வீட்டிற்கு பாதுகாவலனாய் எனது நன்றி உணர்வைக்காட்ட.. அவன் வழக்கம்போல் என் மீது பரிவாளனாய்!

ரஹீம் போட்ட எலும்புத்துண்டுகளே என் வாழ்க்கையின் தூண்டுகோல்கள். இப்போது என் வாழ்க்கை விடியல்கள் முழுவதும் ரஹீமின் சூரிய வெளிச்சங்களில்.. பளபளப்பாய்!

■



# ஒற்றைப் பார்வையில் விளக்கெரித்தாய்

ஒற்றைப் பார்வையில் விளக்கெரித்தாய் - என்
ஆயுள் ரேகையை அதில்பிடித்தாய்!
ஒற்றைப் புன்னகை வீசிவைத்தாய்! - நான்
உண்ண உண்ண பசிகொடுத்தாய்!

ஒற்றை ஒளிமழை நீநடந்தாய் - உனைச்
சுற்றிலும் ஆயிரம் நிலவெரித்தாய்!
கற்றுக்கொடுத்தென் கால்பதித்தாய்! - என்
கைகளில் ஆயிரம் வான்வளர்த்தாய்!

வெற்றுத் தாளெனைக் கவியாக்க - நீ
வீசிய புன்னகைச் சொல்லடுக்கும்...
சுற்றிலும் நீயே இருந்துவந்தாய் - அந்தச்
சொர்க்கத்தின்வாசலில் விருந்துவந்தாய்..

மதங்களைக் கடந்தச் சந்தனமே! - மன
மாளிகை வாசலின் செந்தமிழே!
இதம் இதம் இதமென இனிப்பவளே! - என்
இதயத்தில் எனக்கிடம் தருபவளே...

வகைவகை யாயுனை வரைபவளே - என்
வாசலில் வந்து நிறைபவளே
மிகைமிகை இதுவென ஏதுமில்லை - நீ
மேதைமை யாய்வந்தாய் ஞானமகள்!

**- ஏகாம்பரம் துரை**



# திருக்குறள் சமய சார்பற்ற இலக்கியம்

## இசைவாசி க.சிவராஜ்



“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்கிற மனிதத் தத்துவத்தை ஈட்டி, அம்பு, கல்ஆயுதம்,பிடித்து அலைந்து கொண்டிருந்த கற்கால மனிதர்களுக்கு மத்தியில் எழுத்தாணி பிடித்து பகுத்தறிவு பேசிய முதல் மனிதன் திருவள்ளுவன். தான் யார் என்று சொல்லி அடையாளப்படுத்தாமல் தன் எழுத்தும் கருத்துமே தான் என இவ்வுலகிற்கு பகர்ந்த ஞானியன். தமிழ் மட்டுமே வள்ளுவனின் அடையாளமாகத் திகழ்கிறது. அதுவே தமிழ் இனத்தின் பெருமை. வள்ளுவன் கோடிக்கணக்கான தமிழர்களின் ஒரு சோறுபதம்.

மதம் என்கிற சொல்லிற்கு கொள்கை என்று பொருள் வரையறுக்கிறது தமிழ் அகராதி. மதச்சாயம் ஏதேனும் குறியீடட்டால் வெளிப்பட்டு விடும். மதம்சார்ந்த படைப்பு களும் அதன் கதாப்பாத்திரங்களும் ஏதே னும் சமய சார்புடையதாக இருந்து விடும். பொதுவான கருத்தை மத நூல்கள் இயம்புவது கடினமான ஒன்றே ஆகும். ஆனால் எவ்வித சமய அடையாளத்தையும் காட்டாமல் தன்னைப் பற்றிய குறியீடும் வெளிப்படுத்தாமல் இருக்கும் ஒரு நீதிநூல் திருக்குறள் மட்டுமே என்று துணிந்து சொல்லலாம்.

1812 ஆம் ஆண்டில்தான் திருக்குறளை அச்சேற்றம் செய்ய முயற்சி செய்கிறது தமிழ் சமூகம். அதை எழுதிய புலவனை உலகிற்கு வெளிப்படுத்தும் வகையில் தமிழகஅரசுஓவியர்களைஅழைத்துவரைய சொன்ன போது பலரும் வரைந்தார்கள். ஆனால் வேணுகோபால் சர்மா வரைந்த வள்ளுவரை தான் இன்றளவிலும் நாம் வள்ளுவராகப் பார்க்கிறோம். ஓவியர் வேணுகோபால் சர்மா வள்ளுவர்க்கு அமைதியின் அடையாளமாகத் திகழும் வெண்நிற ஆடையை அணிவித்தார். எவ்வித மத குறியீட்டையும் அவர் பயன்படுத்தவில்லை என்பதே அவrின் ஓவியத் தேர்விற்கு காரணமாக இருந்தது. மற்றவர்களின் ஓவியம் மதச்சாயம் இருந்ததால் அவற்றை தேர்வு செய்யாமல் விலக்கியது தமிழக அரசு. வள்ளுவர் தனது ஓவியத்தில் கூட மதத்தைச் சேர்க்க விடவில்லை.

“சமரசம் என்பது நாடு, மொழி, சமயநெறி, சாதி முதலியவற்றில் கட்டுப்படாது கடந்து நிற்பது.எல்லாநாட்டார்,எல்லாமொழியினா,; எல்லாசமயத்தார்,எல்லாச்சாதியாரிடத்திலும் புகுந்து நிற்பது சமரச ஞானம். நாடு, மொழி, சமயம் சாதி முதலியவற்றை கொண்டு சமரச உணா;வை இழப்பது அறியாமை” என்னும் உண்மையை உணர்வு பூர்வமாக நம்பியவர் வள்ளுவர்வென்பது அவருடைய சமரச உணர்விற்கு வள்ளுவம் ஒரு சான்று. “இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்” என்று வள்ளுவர் பிச்சை எடுத்து வாழும் வாழ்க்கை ஒருவனுக்கு கிடைக்கும் சூழல் அமைந்து விட்டால் இந்த உலகத்தை இயற்றியவன் கெட்டழிந்து போக என சினம் கொள்கிறான். வேறு எந்த சமய நூலிலும் சொல்ல இயலாத கருத்தை வள்ளுவர் மொழிந்தார். அதுவே இன்றளவிலும் எல்லோரும் போற்றும்படி நிலைக்கிறது.

இலக்கியம் கதாப்பாத்திரத் தன்மையால் நிலைக்காது. அதன் கருத்தாழத்தால்

நிலைக்கும். வள்ளுவர் அறத்தையே கதாப்பாத்திரமாக வைத்திருக்கிறார். அறத்தோடு கூடிய பொருள் இருந்தால் மட்டுமே பேரின்ப வாழ்க்கைகிட்டும் என்பது வள்ளுவரின் சிந்தனை. அது பேறு அடைய செய்யும் உயர்ந்த கொள்கை. அவருடைய கருத்துகள் சமுதாயத்தில் நேர்மறை அதிர்வலையை எப்போதும் ஏற்படுத்தி கொண்டே இருக்கின்றன. மனம் சென்ற இடத்தில் எல்லாம் செல்லவிடாமல் நிலையில் இருந்து நீக்கி நன்மையில் செலுத்துவது அறிவு என்றே பகர்கிறார். அரசியலைப் பற்றி கூறும்போது குடிமக்களைத் தழுவியவாறு ஆட்சி செய்யும் அரசனைதான் தலைவனாக மக்கள் ஏற்பார்கள் என்பார். பெற்றெடுத்த மகனாக இருந்தாலும் நேர்மை தவறி குறுக்கு வழியில் ஊதியத்தை சேகரித்தால் அவனை “பிறன்போல நோக்கப் படும்” என்கிறார். பிறருடைய இன்னல்களைக் கண்டுங்காணாமல் இருப்பவர்களை வள்ளுவர் “செத்தாருள் வைக்கப் படும்” என்கிறார். இவ்வாறு எல்லோருக்கும் பகுத்தறியும் ஞானத்தை தருவதால் “காலம் கடந்த பொதுமை நூல்” என்று புழகப்படுகிறது.

வள்ளுவத்தின் ஒவ்வொரு சொல்லும் நெல்கதிர். பல நாற்றங்கால்களை நட்டு வளர்க்கும் சூரியகதிர். ஞாயிறு போகும் திசையெல்லாம் வெளிச்சம் பரப்புவதைப்போல குறள் இருக்கும் திக்கெல்லாம் மனிதம் பரவுகிறது. முதலில் முப்பால் என்றே அழைக்கப்பட்ட குறளின் மேன்மையை உணர்ந்த பெரியோர்கள் மரியாதை நிமித்தமாக திரு என்கிற அடைமொழியை வழங்கி திருக்குறள் என அழைத்தார்கள். திருக்குறளின் மொத்த சொற்கள் 14,000. மொத்த எழுத்துகள் 42,194. இவ்வடிப்படையில் 133 அதிகாரங்களும் மனிதத்தை மேம்படுத்தும் அட்சயமாகவே இருக்கின்றன.

திருக்குரான் இசுலாமியத்தை மேம் படுத்தும்: திருவிவிலியம் கிறித்துவத்தை மேம்படுத்தும்: கீதை இந்துத்துவத்தை மேம்படுத்தும்: திருக்குறள் மனிதத்தை மேம்படுத்தும். எல்லா மனிதர்களுக்கும் பொதுவாய் இருப்பதால்தான் பொதுமறை என்றழைத்தார்கள்.

மறைமலை அடிகள் திருக்குறள் கிறித்து பிறக்கும் முன்னரே எழுத்தப்பட்டது என்று திண்மையாய் வலியுறுத்துகிறார். இலக்கியம் அவ்வக்கால சூழலுக்கேற்ப எழுதப்பட்டிருக்கும். ஆனால் மூன்று காலத்திற்கும் வினைத்தொகையாய் நிலைத்து நிற்கும் பேறு திருக்குறளுக்கு உண்டு. இயற்கை சீற்றம், போர்வெறி, காலமாற்றம், இனக்கலப்பு, மொழிக் கலப்பு, நவீன இலக்கிய வளா;ச்சி என்று எத்தனை மாற்றங்கள் வந்தபோதும் அழியாத வலிமை திருக்குறளுக்கு உண்டு. அதன் கருத்தாழம் மன அழுக்குகளை தூர்வாறி விடுகிறது. இருளை ஒளி விழுங்குவதை போல குற்றங்களைக் குறள் விழுங்கி விடுகிறது. “உயா;ந்த ஞானத்தைப் புகட்டும் செம்மொழிகளின் தொகுப்பு இதுபோல் உலக இலக்கியத்தில் வேறு எங்கும் இல்லை” என்று ஜெர்மன் தத்துவஞானி ஆல்பர்ட் ஸ்வைட்சர் கூறுகிறார்.

“பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்” என்று தொல்காப்பியர் சொல்வது முற்றிலும் தமிழ் பண்பாட்டிற்கு பொருந்தும். தமிழாpன் பண்பாட்டு விழுமியத்தை பொதிந்து வைத்திருக்கும் காலப் பெட்டகம்தான் திருக்குறள். “களை எடுக்கப்படாத தோட்டம்” என்று இந்த உலகத்தை சேக்ஸ்பியர் சாடுவார். இனக்களைகளை, மதக்களைகளை, நிறக்களைகளை நீக்கி வாழ்வியல் சிறப்பை நிமிர்த்துகிற ஓர் இலக்கியம் திருக்குறள்.

“எல்லா சமயத்தாரும் போற்றக் கூடிய வகையில் எல்லார்க்கும் பொதுவான ஒரு நூல் எழுதி இருப்பது பொpய வியப்பாகும்”. எல்லோர்க்கும்பயனுள்ளவகையில்அமைய வேண்டும் என்பதே ஓர் இலக்கியத்தின் நிலைப்பு தன்மைக்கு வலிமை சேர்க்கும். ஜி.யு.போப் தமிழ் பயின்று திருக்குறளை வாசித்து அதனை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார். லியோடால்ஸ்டாய்

அம்மொழிப்பெயர்ப்பை வாசித்து அறிந்து வியப்புற்று காந்திக்கு அறிமுகம் செய்து வைத்தார். காந்தி திருக்குறளை கற்க முனைந்தார். வள்ளுவரின் மனித வாழ்வியல் கொள்கை எல்லா மனிதர்களையும் ஈர்க்கும் தன்மை பெற்றதற்கு காந்தியும் ஒரு சான்று. பொய்யாமொழி தன்மையும் பொதுமறை கருத்தும்தான் தற்போது திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும் என்கிற குரல் எழும்ப காரணமாக இருக்கின்றன.

தைவான் நாட்டுப் பெருங்கவிஞர் யூசி அவர்கள்கலாம்அவர்களிடம்திருக்குறளின் ஆங்கில மொழிப்பெயர்ப்பை வாங்கி வாசித்துவிட்டு"நான்எப்படிவாழவேண்டும் என்பதை அறிவுறுத்தும் வள்ளுவப் பெருந்தகை அந்தக் கருத்து உலகம் முழுக்க வாழும் அனைத்து மக்களுக்கும் பொருந்தும் வகையில் சிந்தித்திருக்கிறார். அது மட்டுமல்ல: அந்தக் கருத்து இந்தக் காலத்துக்கும் பொருந்தும் வகையில் அமைந்திருப்பதுதான் இதில் உள்ள அற்புதம் என்பதை உணர்ந்தேன்" என்றார். அதன் பிறகு 30 ஆவது உலக கவிஞர்கள் மாநாட்டில் சீன மொழியில் திருக்குறள் அச்சடித்து வெளியிடப்பட்டது. தமிழ் உலக மொழகளில் செம்மொழி என்பதை விடவும் உலக மொழிகளுக்கெல்லாம் செம்மொழி என்பது சாலப் பொருந்தும். திருக்குறள் உலகிற்கு கலங்கரை விளக்கம் என்பது உறுதி கூற்றாகும்.

"ஓதற் கெளிதா யுணர்த்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் -
தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள
முருகுக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு"

எக்காலம் வாழ்ந்தாலும் மனிதன் அக்காலத்திலும் தவறுகள் செய்துகொண்டே இருப்பான் என்பதற்கு நாம் வள்ளுவரைக் கற்கும்போதும் நாம் வாழுகின்ற அனுபவங்களை உற்றுநோக்கும் போதும் உணரக்கூடியதாக இருக்கின்றது. திருக்குறளைப் புரிந்துகொண்டு எம்மிடமுள்ள அழுக்குகளை அகற்ற கற்பதற்கு இலகுவாகவும் கருத்தில் கொள்வதற்கு எளிமையாகவும் இருக்கும் திருக்குறளின் மாண்பைக் கற்க வேண்டும் என்று மாங்குடி மருதனார் அறிவுறுத்துகிறார். வாழ்வியலை உணர்வு ரீதியாகப் புரிந்துகொள்ள முடியவில்லையென்றால் திருக்குறளைப் படிப்பதில் பயனே இல்லை. வள்ளுவர்க்கு தற்புகழ்ச்சி இல்லை. அந்தப் பண்பே அவரின் நூலை உலகப் பொதுமறையாகக் கொண்டு வந்திருக்கிறது. கடவுள் மனிதனுக்கு சொன்னது கீதை. மனிதன் கடவுளுக்கு சொன்னது திருவாசகம்.




உன்னிடம் சொல்ல
காத்திருந்த
வார்த்தைகள்
அனைத்தும்
இதயமெங்கும்
நிறைந்து
மீதமுள்ளவைகள்
இப்பிரபஞ்சம்
முழுவதும்
வியாபித்துள்ளது...
நீ எனைத்தேடி
வரும் நாளில்
என் மௌனங்கள்
உன்னிடம்
உரையாடும்...

- விஜி




# தொடுவானம் நோக்கி...

ஏகாந்த வேளையில்
அடர் நீல இருட்டில்
சத்தம் விழுங்கி
அமைதி காத்தேன்..!

மோகம் விலக்கி
மேனி முறித்த மரங்கள்
உதிர்த்தது இலைகளை..!

குமரிப் பெண்களின்
மோகனச் சிரிப்பாய்_ நதி
அதன் லாவகம் கண்டு
சிந்தை கலைந்தேன்..!

வளைந்தோடும் நதியின்
இயல்பு சரியெனச் சொன்னவன்
தடுக்கி விழுந்து
என்னருகில் வந்தான்..!

வழியில் தடுக்கியது
கல்லொன்று என விளித்தவனை
தீயாய்ச் சுட்டது என் விழிகள்..!

பாதையைக் கணிக்க இயலாதவன்
எனது பாதையை
தேர்ந்தெடுத்து தந்தான்..!

விடியலின் வெளிச்சமுகம்
விண்ணில் தெரிய
தூசி தட்டி
தொடுவானம் நோக்கி
நடக்கத் துவங்கினேன்..!

**அனுராஜ்**

மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்.

"கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி குறுகத் தறித்த குறள்" என்று புலவர் இடைக்காடனாரும் "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்" என்று ஔவையாரும் திருக்குறளின் மேன்மையான கருத்தை நவின்றது திருக்குறளின் கருத்துச் செறிவை வெளிப்படுத்துவது போன்றாகிறது.

திருக்குறள் மனித வாழ்வியலின் சிந்தாந்தம். உள்ளத்தை உறுதிப்படுத்த எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின் என்று சொல்லும் வேதாந்தம். அதன் அதிகாரங்கள் வாழ்வியலுக்கு கையேடு. திருவிவிலயத்து அடுத்த நிலையில் உலக அளவில் அதிக மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள் மட்டும்தான். உயர்ந்த கருத்துகளைக் கொண்ட திருக்குறளைக் குறைந்த விலையில் விற்கப்படுவதும் திருக்குறள் மட்டும்தான். பலருக்கும் புதுபுது கண் ணோட்டத்தை தந்ததால் அதிக உரை எழுதிய நூலாகவும் திருக்குறள் திகழ்கிறது.

மக்கள் நோயின்றி வாழ்தல், மக்கள் பொருள்வளம் பெற்றிருத்தல், விளை பொருட்கள் மிகுந்திருத்தல், கல்வி மற்றும் கலைகளை அனுபவித்து மகிழ்தல், மக்களுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு ஆகிய இந்த ஐந்தும் ஒரு நாடு பெற்றிருக்க வேண்டிய அடிப்படை வசதி என்பதை வள்ளுவன்,

"பிணியின்மை செல்வம் விளைவின்ப ஏமம்
அணியென்ப நாட்டிற்குஇவ் வைந்து"

என்கிறார்.

எல்லா நாட்டினர்க்கும் பொதுவான சித்தாந்தம் சொல்வதால் அடிப்படை வசதிகளில் இனி திருக்குறளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். மதத்தைச் சார்ந்தது அல்ல திருக்குறள் மனிதத்தைச் சார்ந்தது.

# கனவுகளை கலைத்து அடுக்கும் கோடாங்கிப் பாட்டு

முதுமகள்
முடிக்கற்றைத்
தட்டி முடிகிறாள்..
முதிர் புராதன சிரிப்பை
உதிர்க்கிறாள்..
விழிகளின் உக்கிரம்
கங்கென சுடர்கிறது..
நதிப் பெருக்கென
கால்வீசிப் போகிறாள்..

ஊடகங்கள் திகைத்து
திக்குமுக்காட
ஏழு டேரட் கார்டுகளுக்குள்
அரூபம்
புனைவாய்
பீறிட்டடிக்க
பிம்பங்கள் படபடக்க
கடகப் பெட்டிக்குள்
ஒளித்து வைக்கப்பட்ட
சோளக் கதிர் குலைகளில்
மஞ்சள் பூக்கள்
பூக்கின்றன.

குருதி நாற்றத்தை துடைத்தபடி
மேற்கு மலைக்காற்று
தித்திப்பை தூவுகிறது.

சாயைகள் கூத்தாடும்
சொல்வனத்தில்
மிருக மனித தாவர
மீஉயிர்களின் சாறு
வெற்று மனங்களில்
அதிர்வுகளாய் குமிழ் விடுகின்றன.

வங்கொலைகளின்
வாசனையை
நுகர்ந்தபடி
சதைத் துணுக்குகளைத் தேடி
எறும்புகள் திரிகின்றன.

அலறித்துடித்து அலைவுறும்
பாணன்
வரைபடங்களை
அழித்தபடி..
சமுத்ரங்களை எரித்து
சாம்பலாக்கியபடி..
திசைகளைக்
களவாடிக் கணாமல்
திகைக்கிறான்.

தாசிகளின் தாபம்
கிளைகிளையாகப் பிரிந்து
பூமியின் ஊடே
வேதனை துளிர்க்க
விரைகின்றன.

சயனித்து
உயிர்பூ பறிக்கும்
நிசப்த வேட்கை..
சவுக்கடிகளின் துவட்டலில்
வலிகளாய்.

தானியக் குதிரையில்
உருமாறிப் பயணிக்கிறது
அண்ரண்டாப் பட்சி...
கற்பனைகளின்..
இருள் ஒளி கலந்த..
பிரதேசத்தின்...
இனம்புரியாத
நீள்வெளிகளின்
ஆழங்களை நோக்கி.

காற்றில்
பூக்களின் ரம்மியங்கள்
நிரம்பித்
ததும்புகிறது.

**- வசந்ததீபன்**

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
ஜனவரி 2019

# அகிலமே சிறக்க

மு. பாலசுப்பிரமணியன்
புதுச்சேரி



காலையில் எழுந்து பார்த்தால்
கண்ணேநீ சிரிக்க வேண்டும்
கஷ்டங்கள் சூழ்ந்த போதும்
கைப்பிடித்து இருக்க வேண்டும்
மாலையில் வீடு வந்தால்
மகிழ்ந்துநீ அழைக்க வேண்டும்
உப்பில்லை என்று சொன்னால்
உடனேநீ அழவும் வேண்டாம்
தப்பாக எதுசொன்னாலும்
தனிமையில் இடித்து சொல்லு
உறவுகள் கொடுக்கும் தொல்லை
உடனேநீ சொல்ல வேண்டாம்
கரவுகள் கொண்ட மாந்தர்
கடந்துநீ செல்ல வேண்டும்
காசில்லை என்றால் என்னை
கடிந்திடா அன்பு வேண்டும்
வீசிடும் தென்றல் போலே
விழியினில் ஈர்ப்பு வேண்டும்
மாசிலா எந்தன் அன்பை
மகிழ்ந்துநீ ஏற்க வேண்டும்
ஊசியும் நூலும் போல
உயிரே நாம் வாழ வேண்டும்

தூசியைப் போல துன்பம்
துடைத்திடும் மனமும் வேண்டும்
தூயவுன் அன்பை நானும்
துய்த்துதான் சாக வேண்டும்
ஒருதுளி நீரும் கண்ணில்
ஒருநாளும் வைக்க வேண்டாம்
சிறுசிறு பிணக்கை எல்லாம்
சிந்தையில் ஏற்ற வேண்டாம்
மறுபடி பிறக்கும் வாய்ப்பு
மாதரசி கிடைக்கா தம்மா
பிறந்தாலும் சேரும் வாய்ப்பு
பிரிதொரு நாளில் இல்லை
மறந்தும்நீ மகிழ்வை என்றும்
துறந்திட வேண்டாம் அன்பே
அடிக்கடி சண்டை போட்டும்
அடுத்தநொடி சேர்ந்து கொள்வோம்
நடிக்கவும் மாட்டேன் கண்ணே
நானென்றும் உன்றன் மாமா
வாழும் நாளனைத்தும் ஒன்றாய்
வாழுவோம் உள்ளன்போடு
ஆழமாய் அன்பை விதைப்போம்
அகிலமே சிறக்க வாழ்வோம் !